பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

# வலம்புரி

Valampuri

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 புரட்டாதி 23 வெள்ளிக்கிழமை (10.10.2003) தொலைபேசி - 2223378 ஒலி 295

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது

ராப் கோ சீமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT



## பிரிட்டிஷ் பாதுகாப்பு பிரதிநிதிகள் நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

நாடுகளில் நிலவுகின்ற முரண்பாடுகளைக் களைந்து தீர்வு காணுதல், பாதுகாப்பு, ஐக்கியம் என்பவற்றைக் கட்டி வளர்த்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு உலக நாடுகளுக்கு விஜயங்களை மேற்கொண்டு வரும் பிரிட்டன் பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கும் 'பிரிட்டன்-றோயல் கொலிஜ் ஒவ் டிபன்ஸ் பிரதிநிதிகள் 13 பேர் மற்றும் இலங்கைக்கான பிரிட்டன் உயர்ஸ்தானிகராலயத்தைச் சேர்ந்த மூவரடங்கிய 16 பேர் கொண்ட குழுவினர் நேற்று யாழ்.குடாநாட்டுக்கு விஜயம் செய்தனர்.

யாழ்.குடாநாட்டின் இன்றைய நிலைவரம் குறித்து நேரில் அறிந்தும் மக்கள் பிரதிநிதிகளிடம் கேட்டும் செல்வதை நோக்கமாகக் கொண்ட பிரிட்டன்-றோயல் கொலிஜ் ஒவ் டிபன்ஸ் தலைவர் லெப்டினனட் கேணல் சேர் கிறிஸ்தோபர் வலஸ் தலைமையிலான இந்தக் குழுவில் சுவிஸ்லாந்து கட்டார், அயர்லாந்து ஆகிய ஏழு நாட்டவர்கள் உள்ளடங்கியுள்ளனர்.

இவர்கள், யாழ்.ஆயர் இல்லம், யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம், யாழ்.பல்கலைக் கழகம், போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ்.அலுவலகம் ஆகியவற்றுக்கும் சென்று இன்றைய குடாநாட்டு நிலைவரம் பற்றிக் கேட்டறிந்தனர். (உ-16,43)

# கிண்ணியாவில் வன்முறை

# தமிழ்-முஸ்லிம்கள் மோதல்

## ஊரடங்கு உத்தரவு

(நமது நிருபர்)

**திருகோணமலை மாவட்டத்திலுள்ள கிண்ணியாவில் காணித்தகராறு காரணமாக தமிழ்-முஸ்லிம் சமூகத்தவர்களிடையே ஏற்பட்ட முறுகல் நிலை, வன்முறையாக மாறி,அப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவுகிறது.**

**நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக நேற்றுப் பிற்பகல் 6மணி முதல் இன்றுகாலை ஆறு மணிவரை பொலிஸாரால் ஊரடங்கு உத்தரவு அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.அமைச்சர் ரவூப்ஹக்கீம் அவசர அவசரமாக திருமலை சென்றுள்ளார்.**

கிண்ணியாவில் உள்ள சரவணமுத்து தோட்டப்பகுதியில் காணித்தகராறு காரணமாக தமிழ் முஸ்லிம் சமூகத்தவர்களிடையே உருவான சர்ச்சையே முறுகல் நிலையடைந்து வன்முறையாக மாறியுள்ளது..

மேற்படி பகுதியில் சரவணமுத்து. என்பவருக்குச் சொந்தமான 160 ஏக்கர் காணியில் அவரின் மரணத்தையடுத்து முஸ்லிம் சமூகத்தவர்கள் அங்கு குடியேறி பைசல் நகர் என அதற்கு பெயர் சூட்டியதுடன், அங்கு அல்இர்பான் வித்தியாலம் என்னும் முஸ்லிம் பாடசாலை ஒன்றை நிறுவியுள்ளதாகவும், கடந்த 22-ம் திகதி அப்பாடசாலை மைதானத்திற்கென மேலும் அங்கு காணி சுவீகரிப்பில் ஈடுபட்டதாகவும் இதனாலேயே அங்கு குடியிருந்த தமிழ் சமூகத்தவர்களுக்கும் முஸ்லிம் சமூகத்தவர்களுக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டதாகவும் தெரியவருகிறது.

இதனிடையே பாடசாலை மைதானத்திற்கான காணியை விஸ்தரிக்க தமிழ் சமூகத்தவர்கள் இடையூறாக இருப்பதாக கூறி அதனைக் கண்டிக்கும் வகையில் நேற்று முன்தினம் கிண்ணியா பிரதேச செயலகம் முன்பாக முஸ்

(10ம் பக்கம் பார்க்க)

## எரிக்சோல் - யசூசி அகாஷி நோர்வேயில் சந்தித்தனர்

(கொழும்பு)

நோர்வேயின் விஷேட தூதுவர் எரிக்சோல்ஹெய்முக்கும் யப்பானின் விஷேட தூதுவர் யசூசி அகாஷிக்கும் இடையே நேற்றுமுன்தினம் நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவில் சந்திப்பொன்று நடைபெற்றது.

இச் சந்திப்பில் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகளின் தற்போதைய நிலைமைகள், வடக்குக்கிழக்கு அபிவிருத்தி இடைக்கால நிர்வாக சபை என்பன குறித்து இருவரும் ஆராய்ந்தனர் என வெளிநாட்டு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தற்போது அயர்லாந்தில் தங்கி இருக்கும் நோர்வேத் தூதுவர் இம் மாத நடுப்பகுதியில் இலங்கை வரவுள்ளார் எனவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.(தி-61)

## விடுதலைப்புலிகளின் திட்டவரைபு முஸ்லிம்களிடமும் கையளிக்கப்படும்

### பிரதமர் ரணில் உறுதி மொழி

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாண இடைக்கால நிர்வாக சபைத் திட்டவரைபு குறித்த அரசாங்கத்தின் யோசனைகளுடன், தமிழீழ விடுதலைப் புலிகளின் மாற்று யோசனைகளும் எம்மிடம் சமர்ப்பிக்கப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளதாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், எமது கட்சி மாத்திரமின்றி வடக்கு கிழக்கு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் அவற்றை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான அடுத்தகட்டச் சமாதானப் பேச்சுக்களின் போது, முஸ்லிம் பிரதிநிதிகள் தனித்தரப்பாக பங்கேற்பது குறித்து பாராளுமன்றத்தில் விவாதம் ஒன்று நடத்தப்பட வேண்டுமெனக் கோரிக்கை விடுத்துள்ளோம்.

பிரிட்டிஷ் அரசியல் யாப்பு கட்டமைப்புக் குறித்து ஆராய்வதற்காக எமது பிரதிநிதிகள் அடங்கிய குழுவொன்று எதிர்வரும் 25ம் திகதி அங்கு செல்லவுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (தி-60)

## முஸ்லிம் பாராளுமன்றக்குழு இந்தியத் தூதுவர் சந்திப்பு

(கொழும்பு)

அடுத்த கட்டச் சமாதானப் பேசுவார்த்தைகளில் முஸ்லிம் பிரதிநிதிகள் தனித்தரப்பாகக் கலந்து கொள்ள வேண்டும்என வடக்குக் கிழக்குப் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் நிருபன் சென்னிடம் வலியுறுத்தியுள்ளனர்.

வடக்குக்கிழக்குப் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டமைப்புப் பிரதிநிதிகளுக்கும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகருக்கும் இடையில் நேற்று முன்தினம் இந்தியத் தூதரகத்தில் நடைபெற்ற பேச்சுக் களின் போதே இவ்வாறு வலியுறுத்தப்பட்டது.(தி-61)

## சமாதான முயற்சிக்கு எதிராக — பத்து இலட்சம் மக்களை திரட்ட ஸ்ரீ.சு.கட்சி ஏற்பாடு

(கொழும்பு)

10 இலட்சம் ஆதரவாளர்களைத் திரட்டி கொழும்பில் ஸ்ரீ.சு.கட்சி பாரிய பொதுக் கூட்டமொன்றை நடாத்தவுள்ளது. இம் மாத முடிவில் நடைபெறவுள்ள சுதந்திரக் கட்சியின் இக் கூட்டத்திற்கு, 10இலட்சம் ஆதரவாளர்களைக் கொழும்பிற்கு அழைத்து வருவதற்குத் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ளவெனப் பல்வேறு குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

சுதந்திரக் கட்சியை மீளக் கட்டியெழுப்புவது தொடர்பான கூட்டமொன்றில் கலந்து கொண்டு பேசிய போதே ஜனாதிபதி இதனை தெரிவித்தார். கூட்டத்தில் பங்குபற்றவென 10 இலட்சம் ஆதரவாளர்களை நாடு முழுவதிலுமிருந்து கொழும்பிற்குக் கொண்டு வருவது தொடர்பாகத் தேவையான அறிவுறுத்தல்களை ஜனாதிபதி கட்சியினருக்கு வழங்கினார். இதன்படி ஒழுங்கமைப்புக் குழு, நிதிக் குழு, கூட்ட ஏற்பாட்டுக்குழு, பாதுகாப்பு குழு என்பன அமைக்கப்பட்டுள்ளன. (த)

## முதல் பெண் மாவீரர் மாலதியின் 16-வது நினைவு தினம் இன்று

(தொல்புரம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் முதல் பெண் மாவீரரான 2-ம் லெப். மாலதியின் 16-வது ஆண்டு நினைவு தினமும், தமிழீழ பெண்கள் எழுச்சி நாளும் தமிழீழமெங்கும் இன்று உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இம்முறை யாழ்.குடாநாட்டிலும் மாலதியின் நினைவு தினம் மற்றும் தமிழீழப் பெண்கள் எழுச்சி தினம் வெகுசிறப்பாகக் கொண்டாடப்படுவதற்கு ஏற்பாட்டுக் குழு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

கடந்த 1987-ம் ஆண்டு கோப்பாய்ப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் இந்திய இராணுவத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட நேரடி மோதலில் முதலாவது பெண் மாவீரரான மன்னாரைச் சேர்ந்த 2-ம் லெப்.மாலதி வீரகாவியமானார்.

அவர் வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட கோப்பாய்ப்பகுதியில் அமைந்துள்ள மாலதியின் நினைவாலயத்தில் இன்று காலை 9 மணிக்கு நினைவு நிகழ்வுகள் ஆரம்பமாகித் தொடர்ந்தும் நடைபெறவுள்ளன.

அத்துடன் மாலை நிகழ்வுகள் கோப்பாய் கந்தசுவாமி ஆலய முன்றிலில் பிற்பகல் 5 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

இதேவேளை யாழ்.குடாநாட்டில் பரவலாக மாலதியின் நினைவு நிகழ்வுகள் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-70)

# மனித உரிமைகள் குறித்து பொலிஸாருக்கு அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

மனித உரிமைகளைப் பேணும் விதத்தில் மக்களுக்கு சேவை யாற்றுதல் பற்றிய அறிவுறுத்தல் களை மனித உரிமைகள் ஆணைக் குழுவினர் சாவகச்சேரிப் பொலி ஸாரிற்கு வழங்கியுள்ளனர்.

அண்மைக் காலமாக யாழ். மாவட்ட பொலிஸ் நிலையங்களில் இடம்பெற்று வரும் மனித உரிமை மீறல்கள் மற்றும் அங்கு செல்லும் பெண்களை ஆண் பொலிஸார் விசாரணை மேற்கொள்வதால் ஏற்படும் அசௌகரியங்கள் விசாரணைகளில் ஏற்பட்டுள்ள மொழிப்பிரச்சினை முறைப்பாட்டு பதிவு ஆகியவற்றால் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் குறித்து பலராலும் சுட்டிக்காட்டப்பட்டு வருகின்ற நிலையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவினர் நேற்று முன்தினம் சாவகச்சேரி பொலிஸ் நிலையத் திற்குச் சென்று பொலிஸ் நிலைய அதிகாரிகளைச் சந்தித்து மேற்படி விடயம் பற்றி கலந்துரையாடினர்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக விசாரணை அதிகாரி பெறோங் பொதுமக்களுடன் பொலிஸார் இவ்வாறு நடந்து கொள்வதால் மக்களின் மனித உரிமைகள் மீறப்படுவதாகவும் இதனால் பொதுமக்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்தும் பொலிஸ் அதிகாரிகளுக்கு விளக்கிக்கூறி னார்.

பொலிஸார் மனித உரிமைகளைப் பேணும் விதத்தில் மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் எனவும் இச்சந்தர்ப்பத்தில் வலியுறுத்தினார்.

(உ-4)

# சிறுவர் துஷ்பிரயோகம் இரண்டு பிக்குகள் கைது




## பாதிக்கப்பட்ட மக்கள்...

சட்ட உதவி மன்றமானது, பின்வரும் சட்ட உதவித் திட் டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது:

1. உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்களுக்கும், மீளக் குடியமர்ந்தோ ருக்கும்;
2. மனித உரிமைகள், அடிப்படை உரிமை மீறல்கள் தொடர்பாக;
3. குற்றச் செயல்களால் பாதிக்கப்பட்டோர் தொடர்பாக;
4. நுகர்வோர் பாதுகாப்புத் தொடர்பாக;
5. வெளிநாடுகளில் தொழில் புரியும் பணிப் பெண்களுக்கான சட்ட உதவி தொடர்பாக.
6. வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களுக் கான சட்ட உதவி;
7. முதியோருக்கான சட்ட உதவி.

இவற்றுள் 1, 6ஆம் விடய ங்கள் தொடர்பில, தாபரிப்பு வழக்குகள், விவாகரத்து வழக்குகள், திருமணம் செய்வ தாக எழுத்துமூலம் வாக்குக் கொடுத்துவிட்டு மீறுவது தொடர்பான வழக்குகள், விபத் துக்களால் மரணமடைந் தவர்கள், பாதிக்கப்பட்டவர் களின் வழக்குகள் போன்றவை இலவசமாகச் செய்து கொடுக் கப்படும்.

இவற்றுள் 3ஆவது விடயம் தொடர்பில், கற்பழிக் கப்பட்ட பெண்கள், சிறுமிகள்; பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளான சிறுவர்கள், பெண்கள்; வீடுகளில் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்படும் மனைவிகள் போன்றோர்களின் விடயங்கள் அடங்கும்.

வறியவர்களுக்கான இலவச **DNA Signature:**

இன்று எமது சமூகத்தில வயது குறைந்த பெண் பிள்ளைகள்; கர்ப்பிணிகளும், தாய்மாரும் ஆக்கப்பட்டுள் ளனர். இது சட்டத்திற்கு விரோதமான செயற்பாடாகும். தாய் தந்தையரும், பெண் பிள்ளையும் விரும் பினா லென்ன, விரும்பாவிட்டால் என்ன, 18 வயதிற்குக் குறைந்த ஒரு பெண் பிள்ளை கர்ப்பிணி ஆக்கப்படால், தாய் ஆக்கப் பட்டால், இன்றைய இலங்கைச் சட்டத்தின்படி, அது கற்பழிப் புக்குச் சமனானதாகும.

மேலும், யாழ்ப்பாண, ஏனைய மாவட்டங்களில் ஒரு புறத்தில்பெண்கள் தாயாக ஆக்கப் பட்டபின்னர், அப்பிள்ளையின் தந்தை அப்பிள்ளை தன்னுடை யது அல்ல எனக் கூறுவதும்; பலருடன் சென்று தாயான ஒரு பெண், தனது பிள்ளையானது தான் சுகவாழ்வில் இருக்க வழிவகைப்படுத்தக்கூடிய ஒருவரினது எனப் பொய்யாகக் கூறுவதும்; பிரிந்து வாழ்வதாகக் கூறும் கணவன், பிள்ளைகள் தன்னுடையது அல்ல எனக் கூறி, பராமரிப்புப் பணத்தை கட்ட மறுப்பதும், விவாகரத்தைக் கோருவதும், நீதி மன்றங்களால் நீதியை வழங்குவதில் பெரும் பிரச்சனைகளை உருவாக்கி வந்திருந்தன.

இந்த நிலையில், யாழ் சட்டத்தரணிகள் சங்கத்தின் பெருமுயற்சியின் பலனாக, பிறந்த பிள்ளையானது குறிப்பிட்ட ஒருவரின் பிள்ளைதானா, இல்லையா என்பதை மரபணு ஆய்வுமூலம் அறிந்து, நீதியை வழங்க **DNA Signature** பெற்றுக்கொள்ளும் முறையா னது யாழ்ப்பாண நீதிமன் றங்களில் புகுத்தப்பட்டது. இப்படியான சம்பவங்கள் மிகப் பெருமளவில் வறுமையான மக்கள் மத்தியில் நடைபெற்று வருவதால், **DNA Signature** இனை வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள சகல பெண்களுக்கும் இலவசமாகச் செய்யும் திட்டத்தினை சட்ட உதவி மன்றமானது புகுத்தியுள்ளது. இதனால், பல பெண்களும், ஆண்களும் நீதியைப் பெற வழிவகுக்கப்பட்டுள்ளது.

# மீளக்குடியமர முடியாதுள்ள மக்களின் பிரச்சினைகளை முழுமையாக எம்மால் தீர்த்து வைக்க முடியாது

## அரசின் கைகளிலேயே இது தங்கியுள்ளது

## யு.என்.எச்.சி.ஆர்.யாழ்.தலைமையாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்குடாநாட்டில்உள்ள அனைதது நலன்புரி நிலையங்களிலும் தங்கி யுள்ள அனைவரினதும் பிரச்சினை களை முழுமையாக எம்மால் தீர்த்து வைக்க முடியாது.

இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்த மற்றும் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள குடும் பங்களுககு உண்மையாகவே உதவக் கூடிய வல்லமை அரசாங்கத்துக்கே உள்ளது.அத்துடன் அரசாங்கம் செய்யத் தவறுகின்றதையே நாம் செய்து வருகின்றோம்.

அகதிகளுக்கான ஐக்கிய நாடு கள் உயர்ஸ்தானிகராலயத்தின் யாழ்.வெளிக்கள காரியாலயத் தலைமையாளர் கெய்சுகி முறாட்டா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமது செயல் திட்டங்கள் குறித்து எமது நிருபரிடம் மேலும் விளக்கிய முறாட்டா,

யுத்தம் இடம்பெற்ற நாடுகளுடன் ஒப்பிடுகின்ற போது, யாழ்ப்பாணத் தில் பணிசெய்கின்ற சூழல் மிகவும் உயர்வானதாகவுள்ளது. எமது செயற்றிட்டங்களை அரசகட்டமைப்பு களுடன் இணைந்து செய்வதன் மூலம் நல்ல பலன்களைப் பாதிக்கப் பட்ட மக்கள் பெறுகின்றனர்.

எமது நிறுவனம் அதன் பாரம் பரியத்தினைப் பேணி, நம்பகத்தன் மையை மேன்மைப்படுத்தி, யாழ்ப் பாண மாவட்டத்தில் வீடமைப்பு குடிநீர் வழங்கல் போன்ற திட்டங்களை அமுல் செய்து வருகின்றது.மாவட் டத்திலுள்ள இடம்பெயர்த்தோர் நலன்புரிநிலையங்களில் தங்கியுள்ள குடும்பங்களின் பரிதாபகரமான வாழ்க்கைநிலைவரம் பற்றி நான் நன்கு அறிவேன்.

அதற்கும் மேலாக உயர்பாது காப்பு வலயப் பிரச்சினை இன்று ஒரு உயர்மட்டப் பிரச்சினையாகவே உள்ளது.புரிந்துணர்வு ஒப்பந்தத் தின்பின்னர் இடம்பெயர்ந்த குடும் பங்கள் தமது சொந்த இருப்பிடங் களுக்குச் செல்லலாம்-குடியமரலாம் என எதிர்பார்த்தனர். ஆனாலும் அவர்களுக்கு அவ்வாய்ப்புக்கிட்ட வில்லை.

இந்நிலையில்,சுமார் 10இடம் பெயர்ந்தோர் நலன்புரிநிலையங் களில் இருக்கின்ற 200 வீடுகளை வேய்ந்து மழைகாலத்தில் பாது காப்பான வாழ்க்கையை அமைக் கும் பணியில் அமெரிக்க உதவி நிறுவனமான சி.எச்.எவ். தற்போது ஈடுபட்டு வருகின்றது.

இந்நிறுவனம் அதன் பணிக ளைப் பூர்த்தி செய்ததும் நாட்டை விட்டுப் போய்விடும் இந்தவகையில் மாவட்டப்பணிகளை நாம் யாழ். மாவட்டஅரச அதிபருடன் இணைநது செய்து வருகின்றமை குறிப்பிடத்தக் கதாகும்.

அதேவேளை, யு.என்.எச்.சி. ஆர்.நிறுவனம் புனர்வாழ்வு புனர மைப்பு அமைச்சுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றது இவ்வகை யில் 112மில்லியன் ரூபாவை பல் வேறு திட்டங்களுக்கும் நாம் ஒதுக் கியுள்ளோம்.

அதியுயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினையானது அரசியலுடன் தொடர்புபட்டதாகும். இது விடயத்தில் யு.என்.எச்.சி.ஆர்.நிறுவனத்தினால் எதுவும் செய்யமுடியாது இதனைப் பேச்சுவார்த்தையில் ஈடுபடுகின்ற இருதரப்பினருமே பேசி முடிவெடுக்க வேண்டும்.

அத்துடன்,யு.என்.எச்.சி.ஆர். நிறு வனம் அடுத்தவருடம் முதல் அதன் செயல் திட்டங்களில் மாற்றங் களைச் செய்யவுள்ளது. அவ்வகை யில் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவ னங்களின் திறன் விருத்திச் செயல் பாடுகள் பற்றிய பயிற்சிப்பட்டறை களை நடாத்தவுள்ளது என்று குறிப் பிட்டார்.

தொடர்ந்தும் கருத்து வெளி யிட்ட அவர், தமிழகத்திலுள்ள ஈழ அகதிகளை இங்கு அழைததுவருவது குறித்து இலங்கை- இந்திய அரசு கள் தான் இணைந்து முடிவெடுக்க வேண்டும்.

அங்கு தங்கியுள்ள அகதிகள் பற்றிய விபரங்கள் எம்மிடம் உள்ளன அரசுகள் இதில் முடிவெடுத்ததும் நாம் இந்தப் பணியில் ஈடுபடக்கூடிய நிலை ஏற்படும் அத்துடன், இரா மேஸ்வரம் ஊடாக படகுகளில் இங்கு வரும் ஈழ அகதிகளுக்கான போக்குவரத்துச் செலவு, மற்றும் குடியிருப்பு வழங்கல் போன்றவற் றினை யாழ்.மாவட்ட அரச செய லகம் மூலம் செயல்படுத்திவருகின் றோம் என்று கூறினார்.

இவைதவிர தேசிய அளவில் மனித உரிமைகள் ஆணைக்குழு சட்ட உதவி நிதியம் போன்றவற்றுக் கும் எமது நிறுவனத்தின் உதவிகள் வழங்கப்பட்டுவருகின்றன மேலும் அதிஉயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து வெளியேறிய மீனவ[illegible]றும் விவசாயிகள் நமது சொ[illegible] இடங்களில் மீளக் குடியமரவேண் டும் எனப் பிரார்த்திக்கின்றேன் என தெரிவித்தார்.

(உ-16)

## பெண் விடுதலை...

அம்சமான பெண்விடுதலை என்பது தேசத்தின் விடுதலையோடுதான் முழுமையாகச் சாத்தியமாகும்.

இதனையே எமது தேசியத் தலைவர் அவர்கள் கீழ்க்கண்ட வாறு குறிப்பிடுகிறார்.'சமத்துவத் தின் அடிப்படையில் ஒரு சமதர்ம சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதே எமது போராட்ட இலட்சியம். பெண் கள் சம உரிமை பெற்று சகல அடக்குமுறைகளில் இருந்தும் விடு தலை பெற்று ஆண்களுடன் சமத் துவமாக கௌரவமாக வாழக்கூடிய புரட்சிகரமான சமுதாயமாகத் தமி ழீழம் அமைய வேண்டும் என்பதே எனது ஆவல்'.

வரலாற்றின் முதல் வரியை எழுதிச் சென்ற 2-ம் லெப்டினன் மாலதியின் இந்த மகத்துவம் வாய்ந்த நாளில் மிகுந்த தன்னம் பிக்கையோடும், கம்பீரத்தோடும் மாபெரும் தேசியத் தலைவரின் தலைமையின் கீழ் தமிழீழத் தேச த்தின் பெண்கள் ஒரு முக்கியமான செய்தியை உலகிற்கும் கூறிக் கொள்ள விரும்புகிறார்கள். 'முன் னொரு காலம் அடங்கிக் கிடந்த பெண்ணினம் தமிழீழத்தின் புதிய வரலாற்றில் போர்க்களங்களில் பகைவரைச் சுட்டெரித்த வீராவே சத்தோடும், தெளிந்த ஞானத்தோ டும் சமூகத்தின் தளைகளையும் சுட்டெரிக்கத் தயாராகிவிட்டனர். புரட்சிப் பெண்கள் யுத்த களங்க ளில் மட்டுமல்ல சமூகத்தின் எல்லாத் தளங்களிலுமே வாழ்கிறார்கள் வளர்கிறார்கள். இன்னும் இன்னும் எந்தத் தீக்குளிப்புக்கும் அவர்கள் தயராகவே இருக்கிறார்கள். எனவே எம்இனத்தின் இத்தனைகால விலை கொடுப்புக்களுக்கும் ஒரு நிரந்தர விடுதலையை எமக்குப் பெற்றுத் தரவேண்டும் இல்லையேல் மேலும் எமது வாழ்வு சிக்கலாகி விடுதலை வீரியம் இழந்துபோய் விடும். இதற்கு நாமோ, எமது தேசியத் தலைமையோ ஒருகாலமும் இட மளிக்கப் பேவதில்லை. விடுதலை யின் சுகத்தை புரட்சியின் மகிழ்ச் சியை நாம் இனம் கண்டு கொண் டோம். மீண்டும் ஒரு அவல வாழ்வோ அடிமையின் சுகமோ எம்மை அண்ட முடியாது. எனவே அனைவரும் இணைந்து நின்று தேசியத் தலை வரின் கரத்தைப் பலப்படுத்துவோம். தேசத்தின் விடுதலையில் இணைந்து நிற்கும் தமிழீழப் பெண்களாகிய நாம் சமூக விடுதலையிலும் இணைந்து முற்போக்கான கொள் கைகளை வாழ்வின் இலட்சியங்க ளாக வரித்து கொள்வோம் என இந் நாளில் உறுதி எடுத்துக் கொள்கின்றோம்'

எம்மோடு இணைந்து பணியாற் றும் அனைத்துப் பெண்கள் அமைப் பினருக்கும் இந்த நாளில் எமது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதுடன் தேசி யத் தலைவர் அவர்களின் வழிகாட் டலில் என்றும் தமிழீழப் பெண்க ளுக்கு பக்கபலமாக நின்று அவர் களின் எழுச்சிக்கு வலுச்சேர்த்து அனைவரும் இணைந்து தேச விடு தலைக்காய் உழைப்போம் என கூறிக் கொள்வதில் அரசியல் துறை மகளிர் பிரிவு பெருமையும் பேரு வகையும் அடைகிறது.

# யாழ். வீராங்கனைகள் கொழும்பு பயணமாகினர்

தேசியமட்ட வலைப்பந்தாட்டப் போட்டிகள் நாளையும், நாளை மறுதினமும் கொழும்பில் உள்ள ரொறிங்ரன் விளையாட்டு கட்டடத் தொகுதி அரங்கில் இடம்பெறவுள்ளன.

இப் போட்டிகளில் கலந்து கொள்ளவென யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 10 வீராங்கனைகள் நேற்றுக்காலை கொழும்பு பயணமாகினர். இந்த அணியில் வடக்கு-கிழக்கு மாகாண விளையாட்டுப் போட்டிகளில் சம்பியன் பட்டத்தின்ன வென்ற யாழ்.மாவட்ட வீராஙகனைகள் 10பேரும், திருமலை மாவட்ட வீராங்கனைகள் இருவரும் அடங்குகின்றனர்.

இவ் அணிக்கு பயிற்சிகளை வழங்கிய யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட பயிற்றுநர் திருமதி ஏ.எவ்.ஜே.ரூபசிங்கம் தலைமையில் கொழும்பு சென்ற யாழ்.மாவட்ட வீராங்கனைகளின் விபரம் வருமாறு,

நொறின் நீரஜா றிச்சேட், அஜந்தா சிவலிங்கம், கருணா சூடாமணி, மதிவதனா சுந்தரலிங்கம், பிரபா பரமேஸ்வரன், நிஷாந்தி பால கிருஸ்ணன், ஜெரால்டில் ரெமின்ரா ஜோன்பீற்றர், சுகிர்தா தில்லை நாதன், எஸ்.கார்த்திகா, வாசுகி திருநாவுக்கரசு.

(உ-68)

# வடகிழக்கு வீரர்களுக்கு வழிகாட்டிய வதிவிட விளையாட்டுப் பயிற்சி முகாம்

யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் வடக்கு-கிழகக்கு கல்வி பண்பாட்ட லூவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் அனுசரணையுடன் கடந்த வார இறுதியில் யாழ்.மத்திய கல்லூரியில் வதிவிட விளையாட்டுப் பயிற்சி முகாம் ஒன்று நடாத்தப்பட்டது.

இந்த வதிவிடப் பயிற்சி முகாமல் உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம் என்பவற்றுடன் மெய் வல்லுநர் விளையாட்டுக்களுக்குமான பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்பட்டன.

கடந்த வெள்ளிக்கிழமை முதல் 3 நாட்களாக நடாத்தப்பட்ட இந்த பயிற்சி முகாமில் 45வீர வீராங்கனைகள் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர்.

யாழ்.மாவட்டத்தின் பல பாகங்களிலும் இருந்து வருகைதந்த இப் பயிற்சியாளர்களுக்கு துறைசார் ஆரம்பநிலைப் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

வீரர்கள் தமது விளையாட்டு நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டும் என்பதற்காகவே இப் பயிற்சி முகாமை ஏற்பாடு செய்யப்பட்டதாக யாழ்.மாவட்ட இளைஞர் சேவைகள் மன்ற உதவித் திட்ட இயக்குநர் தி.சிவதட்சணா மூர்த்தி தெரிவித்திருந்தார்.

இப் பயிற்சி முகாமையினை யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு றொகாண் றாஜசிங்கம், பிரதேச விளையாட்டு அலுவலர்கள் மற்றும் வலைப்பந்தாட்ட, கரப்பந்தாட்ட, உதைபந்தாட்ட சங்கங்களைச் சேர்ந்த அதிகாரிகள் ஆகியோர் வழிநடத்தினர். (உ-68)

# சகலதுறை ஆட்டக்காரர் அன்ரூ இலங்கையுடன் மோதுவார்

பங்களாதேஷ் அணிக்கெதிராக நடைபெறவுள்ள டெஸ்ட் கிறிக்கெற் போட்டிகளில் இங்கிலாந்து அணியின் சகலதுறை ஆட்டக்காரரான அன்ரூ பிளின்ஒவ் கலந்துகொள்ள மாட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கால் உபாதை காரணமாகவே இவர் இந்தப் போட்டிகளில் கலந்து கொள்ளமாட்டார் என இங்கிலாந்து கிரிக்கெற் கட்டுப்பாட்டுச்சபை தெரிவித்துள்ளது.

எனினும் பங்களாதேஷ் அணிக்கெதிரான ஒருநாள் சர்வதேச போட்டித்தொடரிலும், இலங்கை அணிக்கெதிரான டெஸ்ட் போட்டித் தொடர் மறறும் ஒருநாள் சர்வதேச போட்டித் தொடரிலும் அன்ரூ பிளின்ஒவ் கலந்துகொள்வார் என இங்கிலாந்து கிரிக்கெற் கட்டுப்பாட்டுச்சபை மேலும தெரிவித்துள்ளது.

இதேவேளை, இவருக்குப் பதிலாக கென்ற் பிராந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் மாட்டின் சேர்கஸ் இங்கிலாந்து அணியில் இடம் பெறவுள்ளார்.

கடந்த கிரிக்கெற் பருவ காலத்தில் கென்ற் பிராந்திய அணிக்காக முத்தையா முரளிதரனுக்கு அடுத்தபடியாக அதிக விக்கெற்றுக்களை கைப்பற்றி இருந்தது மாட்டின் சேர்கஸ் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

(உ-68)

# சினேக பூர்வ உதைபந்தாட்டம்

(சுண்டிக்குளி)

யாழ்.சென்பற்றிக்ஸ் கல்லூரி அணிகளுக்கும், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணிகளுக்கும் இடையில் வருடா வருடம் நடைபெறும் சினேக பூர்வ உதைபந்தாட்டப் போட்டிகள் கடந்த சனிக்கிழமை சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

முதலாவதாக இடம்பெற்ற "பேபி" அணிகளுக்கான ஆட்டத்தில் சென்பற்றிக்ஸ் கல்லூரி அணி 2:0என்ற கோல்கணக்கில் வென்றது.

இரண்டாவதாக இடம்பெற்ற 15 வயதிற்கு உடபட்ட 3வது பிரிவு அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில் யூனியன் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் பலத்த போட்டியின் பின் வென்றது.


மூன்றாவதாக இடம்பெற்ற 17 வயதிற்கு உட்பட்ட இரண்டாவது பிரிவு ஆட்டத்தில் சென்பற்றிக்ஸ் அணி 4:0என்ற கோல் கணக்கில் வென்றது.

இறுதியாக இடம்பெற்ற 19 வயதிற்குட்பட்ட முதலாவது பிரிவு ஆட்டத்தில் சென்பற்றிக்ஸ் கல்லூரி அணி 6:0என்ற கோல் கணக்கில் வெகு சுலபாமாக வென்றது.

(உ-110)



# விளையாட்டுச் செய்திகள்



# சைக்கிள் ஓட்ட சம்பியனானார் ரஷிய வீரர் மிக்கேல் இக்தாட்டீவ்

ஹமில்டனில் நடைபெற்ற உலக சைக்கிள் ஓட்ட சம்பியன்சிப் போட்டிகளில் ரஷ்யாவைச் சேர்ந்த மிக்கேல் இக்தாட்டீவ் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இந்தப் போட்டியில் உக்ரைன் நாட்டைச் சேர்ந்த றெமிட்டோ றங்கன் இரண்டாவது இடத்தையும், சுவீடனைச் சேர்ந்த விக்ரர்ரெனன் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

பெல்ஜிய வீரரான டெமினிக் கோனோ நான்காது இடத்தையும் அவுஸ்திரேலிய வீரரான வில்லியம் வோக்கர் ஐந்தாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

இப் போட்டியின் போது ஆரம்பம்முதல் ரஷிய வீரருக்கும், உக்றைன் வீரருக்கும் இடையில் கடும் போட்டி நிலவியது எனினும் மிகத் திறமையாக தனது இறுதி கட்டத்தை ரஷ்ய வீரர் ஓடிமுடித்து அனைவரது வரவேற்பையும் பெற்றுக் கொணடதுடன் இப் போட்டியில் சிறந்த பேறுபேற்றையும் வெளிக்காட்டியிருப்பதாக பாராட்டுப் பெற்றுள்ளார்.

(உ-68)

# வெளிச்சம் சதிசெய்த போதிலும் வெற்றியை வசப்படுத்திய தென்னாபிரிக்கா

## பாக்.இரசிகர்களுக்கு படு ஏமாற்றம்

பாகிஸ்தான் அணிக்கெதிராக நடைபெற்ற மூன்றாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெற் போட்டியில், தென்னாபிரிக்க அணி, இறுதி 5பந்துப்பரிமாற்றங்களில் 46 ஓட்டங்களைப் பெறவேண்டியிருந்த போது, போதிய வெளிச்சமின்மை காரணமாக போட்டி இடைநிறுத்தப்பட்டது.

எனினும், புதிய டக்வோர்க்-லூயிஸ விதிக்கமைய தென்னாபிரிக்க அணி 45 ஓவர் முடிவில் பெறவேண்டிய ஓட்டங்களைவிட 13 ஓட்டங்கள் கூடுதலாக பெற்றிருந்தமையினால் தென்னாபிரிக்க அணி இவ் ஓட்ட எண்ணிக்கை வித்தியாசத்தில் பாகிஸ்தான் அணியை வெற்றி கொண்டதாக அறிவிக்கப்பட்டது.

இதன்படி 5போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச போட்டித் தொடரில் 2:1என்ற புள்ளிகள் அடிப்படையில் பாகிஸ்தான் அணி தொடர்ந்து முன்னிலை வகிக்கின்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை பைஸலாபார்த்தில் நடைபெற்ற இவ் 3வது ஒருநாள் சர்வதேச போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர் முடிவில் 8விக்கெற்றுக்களை இழந்து 267 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதில் பாகிஸ்தான் அணி சார்பாக துடுப்பெடுத்தாடிய யஸிர் ஹமீட் 72 ஓட்டங்களையும், அப்துல் ரஸாக் 46 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பின்னர் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி, 45 ஓவர் முடிவில் 6 விக்கெற் இழப்பிற்கு 221 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளையில், ஆட்டம் போதிய வெளிச்சமின்மை காரணமாக இடைநிறுத்தப்பட்டது. வெளிச்சம் போதாமையினால் ஆட்டம் மீளத் தொடங்கப்படவில்லை.

எனினும், டக்வோர்த்-லூயிஸ் விதிக்கமைய வெற்றிதோல்வி தீர்மானிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. புதிய டக்வோர்த்-லூயிஸ் விதிக்கமைய முதல் முதலில் இவ்விரு அணிகளுக்கும் இடையிலான இப் போட்டியிலேயே வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதன் பிரகாரம் 45ஓவர் முடிவில 208 ஓட்டங்களைப் பெற்றிருந்ததால் தென்னாபிரிக்கா வெற்றி பெற்றது என அறிவிக்கப்பட்டதுடன், அப்போது தென்னாபிரிக்க அணி 208 ஓட்டங்களைவிட மேலதிகமாக பெற்றிருந்த 13 ஓட்டங்களால் பாகிஸ்தான் அணியை வெற்றி கொண்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

எனினும் விறுப்பான போட்டி முடிவை எதிர்பார்த்திருந்த பாகிஸ்தான் கிரிக்கெற் ரசிகர்களுக்கு இம் முடிவு பெரிதும் ஏமாற்றமாக அமைந்தது என்பதை அரங்கில் கூடியிருந்த அவர்களின் அகத்திரையில் காண முடிந்தது.

(உ-68)

# ஆசிரியர் தினத்தை ஒட்டிய கட்டுரைப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களிடையே இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் நடத்திய கட்டுரைப் போட்டி முடிவுகள் வருமாறு;

## மாவட்ட மட்டம்

முதலாம் இடம்:திருமதி கௌரி கணேசலிங்கம் (நாவாந்துறை றோ.க.வித்தி.)

இரண்டாம் இடம்:திருமதி சத்தியவாணி செபமாலைதாசன் (பெரியபுலம் ம.வித்தி.)

மூன்றாம் இடம்:கே.திருச்செல்வம் (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை)

## வலய மட்டம்

**தீவகம்:** செல்வி ப.அண்ணாமலை (பாஷையூர் சென் அன்ரனிஸ் றோ.க.வித்தி.)

**வலிகாமம்:**
மு.சொர்ணலிங்கம் (தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி)

**வடமராட்சி**
கி.குகநாதன் (புற்றளை மகா.வித்தி.)

**தீவகம்**
செல்வி சிவாஜினி வசந்தநாதன் (வைத்திலிங்கம் துரைச்சுவாமி ம.ம.வித்தி)

**தென்மராட்சி**
செல்வி வேணி சின்னத்தம்பி (மட்டுவில் வடக்கு அ.த.க.பாடசாலை)

(உ)

# அருணோதயஅணி சம்பியனானது

(அளவெட்டி)

யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளனத்தால் நடாத்தப்பட்ட உதைபந்தாட்ட இறுதிச் சுற்றுப் போட்டி கடந்த செவ்வாய் அன்று யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

17 வயது கீழ்ப்பிரிவின் அணியில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி அணியை எதிர்த்து நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி விளையாடியது.

மிகவும் விறு விறுப்பாக இடம்பெற்ற இவ் ஆட்டத்தில் முதலில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி அணி ஒரு கோலைப் போட்டது.

விறு விறுப்பாக விளையாடிய நெல்லியடி மத்திய மகாவித்தி யாலய அணி 2 கோல்களை போட்டது.

சுற்றுப்போட்டி நிறைவடைய 5 நிமிடத்திற்கு முன்பு ஒரு கோலைப் போட்டு இரு அணிகளும் சமநிலையடைந்தன.

பின்பு பனால்டி முறையில் 4:2 என்ற கோல் கணக்கில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி அணி சம்பியனாகியது. (உ-83)

# கடற் றொழிலாளர்களுக்கு மீன்பிடி உபகரணங்கள்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பிரதேசத்தில் வசிக்கும் கடற்றொழிலாளர்களுக்கு மீன்பிடி உபகரணங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளில் கியூடெக் நிறுவனம் ஈடுபட்டு வருகின்றது.

இதன் முதற்கட்டமாக பெரிய மாவடி, கெற்பலி, கச்சாய் போன்ற பிரதேச மீனவர்களுக்கு மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

கடந்தகாலப் போர் நடவடிக்கைகள் காரணமாக தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள மீனவர்கள் பல இலட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்களை இழந்த நிலையில் இடம்பெயர்ந்து பெரும் இன்னல்களை எதிர்நோக்கி இருந்தனர்.

தற்போது மீண்டும் தமது சொந்த இடங்களில் குடியமரக்கூடிய சூழ்நிலை தோன்றிய போதும் தமது தொழிலை மேற்கொள்ளப் போதிய உபகரணங்கள் இல்லாமை காரணமாக பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-04)

## இந்து கலாசார அமைச்சர் ஏற்பாட்டில்

# பனை தென்னைவள அபிவிருத்திச் சங்கங்களுக்கு முச்சக்கர வண்டி

(மட்டுவில்)

யாழ்.மாவட்டத்திலுள்ள 19பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கங்களுக்கும் அவற்றின் மேம்பாடு கருதி தலா ஒவ்வொரு முச்சக்கர வண்டிகள் வழங்கப்படவுள்ளன.

மேற்படி சங்கங்களின் தலைவர்கள் மற்றும் பொது முகாமையாளர்களுடனான சந்திப்பில் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் இத் தகவலை வெளியிட்டார்.

இதேவேளை, பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வோர் சாராய விற்பனை நிலையத்தை நிறுவுவதற்கான அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொடுப்பது தொடர்பிலும் இச் சந்திப்பில் ஆராயப்பட்டது.

பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பொ.சிவபாதம் இச் சந்திபபுக்கான ஏற்பாட்டை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(உ-115)

# பாதிக்கப்பட்ட மக்கள் நீதியைப் பெற விழிப்புணர்வு கொள்வது அவசியம்!


**சாந்தா அபிமன்னசிங்கம்**
**ஒருங்கிணைப்பாளர்**
**யாழ்ப்பாண மாவட்டம்,**
**சட்ட உதவி மன்றம்.**


இலங்கையில நடைபெற்று வந்த 20 ஆண்டு காலப் போரின் தாக்கங்களின் விளைவுகளும், முதலாளித்துவத்தின் "பூகோளமயமாக்கல்" (**Globalisation**) என்ற திசை திருப்பலான புதிய உலக ஒழுங்குமுறை (**New World Order**) என்பதன் தாக்கங்களும், ஒருபுறத்தில், ஒரு சாராரை மேலும், மேலும் செல்வந்தர்கள் ஆக்குகையில், மிகப் பெரும் பகுதியினரை பெரும் வறுமையினுள்ளும், அறிவு-ஆராயும் தன்மை வளர்ச்சி நிராகரிப்பினுள்ளும் வீழ்த்திவருகின்றன; இலங்கையின் வடக்குக் கிழக்கு மக்களின் வாழ்க்கை முறை,

## அறிவும் ஆராயும்தன்மையும் வளர்க்கப்படவேண்டும்

சித்தாந்தம், அரசியல், ஏனையவைகளில், பெரும் தாக்கங்களையும் ஏற்படுத்தி வருகின்றன.

தமிழ் மொழியில் ஆத்திசூடி, நல்வழி, கொன்றை வேந்தன், நாலடியார், திருக்குறள், மற்றும் அற நெறி நூல்களும்; சிலப்பதிகாரம, மற்றும், காப்பியங்களும்; சித்தாந்த நூல்களும, 2000 ஆண்டுகளுக்கு முன்பிலிருந்தே எழுதப்பட்டு வந்துள்ளன எனப் பாட நூல்களிலும், மேடைகளிலும், வெகுஜனத் தொடர்பு சாதனங்களிலும் எழுதப்பட்டும், பேசப்பட்டும் வரும்போதிலும். எமது சமூகத்தில் இன்று உரிமைகள் மீறல், அதிகாரத் துர்ப்பிரயோகங்கள், வன்செயல்கள், பாலியல் துன்புறுத்தல்கள், கற்பழிப்புகள், கொலைகள், ஏமாற்றுக்கள், மோசடிகள்,.... என்பவை பல்கிப்பெருகியே உள்ளன என்பதை, எடுத்த எடுப்பில் எவரும் நிராகரித்து விட முடியாது.

ஒரு சமூகத்தில் உரிமைகள் மறுப்பு, அதிகார துஷ்பிரயோகம், உரிமைகள் மீறல், வன்செயல்கள், பாலியல் துன்புறுத்தல்கள், கற்பழிப்புகள், கொலைகள், ஏனையவைகள், உண்மையில், அறிவும், ஆராயும் தன்மையும அச் சமூகத்தில் பரந்த அடிப்படையில் போதிய அளவிற்கு வளர்க்கப்படாதமையால்தான் உருவாகின்றன.

மேலும், குறிப்பிட்டவொரு விடயம் தொடர்பாக நீதியைப் பெற்றுக்கொள்வதாயின், பாதிக்கப்பட்டவர் நீதியைக் கோரவேண்டும். பாதிக்கப்பட்டவர் உறங்கு நிலையில் இருந்தால், அவருக்கு நீதி கிடைக்கமாட்டாது. பாதிக்கபட்ட ஒருவர், தான் உறங்கு நிலையில் இருந்துவிட்டு, தனக்கு நீதி கிடைக்கவில்லை எனக் கூறுவது, ஒருபுறத்தில், அவரது அறியாமையையும், சுயநலப் போக்கையும், புத்திசுவாதீனமற்ற நிலையையும் தான் உறுதிப்படுத்தும். மறுபுறத்தில், அவரது செய்கையானது, சமூகத்தில் அநீதி நிலைத்துக் கொள்ள உதவும் ஒரு சமூக விரோதச் செயற்பாடுமாகும.

இந்தநிலையில், மேற்குறிப்பிட்டவைகளைச் சமூகத்தில் குறைப்பதாயினும் சரி, இல்லாது செய்வதாயினும் சரி, இரண்டு முக்கிய விடயங்கள் ஒருங்கிணைக்கப்பட்ட விதத்தில் செய்யப்பட வேண்டியுள்ளன. அவையாவன:

1. எமது சமூகத்தின் அறிவையும், ஆராயும் தன்மையையும போதிய அளவிற்கு வளர்த்துக கொள்ளவும், அதனூடாக மனித வாழ்க்கையினை விஞ்ஞான ரீதியாக விளங்கிக்கொள்ளவும் வழிவகைகளைத் திட்டமிட்டவிதத்தில் நடைமுறைப்படுத்துவது;
2. சமூகத்தில் நடைபெறும் உரிமைகள் மீறல், அதிகாரத் துஷ்பிரயோகம், வன்செயல்கள், கொலைகள், பாலியல் துன்புறுத்தல், கற்பழிப்பு, ஏனையவைகளுக்கு எதிராக மக்கள் நீதியைப் பெற்று, குற்றவாளிகள் தண்டிக்கப்படவைப்பதற்கான விழிப்புணர்வுகளைச சமூகத்தில் ஏற்படுத் துவதும, நீதி மன்றங்களுடாக நீதியைப் பெற உதவுவதும்.

இவற்றுள் முதலாவதை, சமூகத்தால் அரசியல் தலைவர்களாகவும், சமூக, சமயத் தலைவர்களாகவும், அறிஞர்கள், கல்விமான்களாகவும் கருதப்படுபவர்களும், ஏற்கப்படுபவர்களும், கல்வித் திட்ட வகுப்பாளர்களும், ஊடகங்களுமே செய்யவேண்டும். பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரையான கல்விப்பாடத் திட்டங்கள், தகுந்த விதத்தில் மாற்றியமைக்கப்பட வேண்டும். அவை மனித வாழ்க்கையினை விஞ்ஞான ரீதியாக விளங்கிக் கொள்ளவும், அதனடிப் படையில் மனித வாழ்க்கையை எப்படி அமைத்துக் கொள்வது பூமியில் மனித இனம் நிலைக்கவும், மேன்மையான, பாதுகாப்பான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவும் உதவும் என்பதை விளங்கி, சட்ட உருவாக்கங்கள் பற்றியும், நீதி பெறுகை, நீதி வழங்கல் என்பவைகள் பற்றிச் சரியாக அறிந்து, செயற்படவும் உதவும்.

மேலும், ஏற்கனவே நடைமுறையில் இருந்துவரும் சட்டங்கள். சாதாரண மக்களின் நலன்களைப் பாதுகாக்கும், அவர்களது முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் நோக்கங்களைக் கொண்டவையா, அல்லது ஒரு சாராரினதும், அதிகாரத்தில் இருப்பவர்களினதும் நலன்களையும், பாதுகாப்பையும் பேணும் நோக்கத்தைத்தான் கொண்டவையா என்பதை அறிந்து கொள்ளவும், இது பெரிதும் உதவும்.

ஆனால், துரதிஷ்டவசமாக, இலங்கை போன்ற நாடுகளில் கல்விப்பாடத் திட்டங்கள் கடந்த காலங்களில் மாணவர்களது, சமூகத்தினது, அறிவையும் ஆராயும் தன்மை யையும் போதிய அளவுக்கு வளர்த்துக் கொள்ள உதவும் வகையில் வகுக்கப் பட்டிருககவில்லை என்பது,

## உறங்கு நிலையில் இருந்தால் நீதி கிடைக்காது

கசப்பான பெரும் உண்மையாகும். இந்த நிலையில், இரண்டாவது விடயமும் மிக முக்கிய இடத்தை இன்று பெறுகிறது.

கல்விப்பாடத் திட்டங்களில் ஏற்படுத்தப்படவேண்டிய மாற்றங்களை செய்ய, சட்டத்தரணிகளும், அவர்களது அமைப்புக்களும் மாற்றங்களை ஏற்படுத்தும் அதிகாரமுடையவர்களுக்கு அழுத்தத்தையும், வலியுறுத்தலையும் மாத்திரமே செய்யமுடியும்.

இரண்டாவதைப் பொறுத்தமட்டில், மக்கள் நீதியைப் பெறவும், குற்றவாளிகள் தண்டிக்கப்படவைப்பதற்கான விழிப்புணர்வைச் சமூகத்தில் ஏற்படுத்துவது வேறு; நீதி மன்றங்களுடாக மக்கள் நீதியைப் பெற உதவுவது வேறு. இந்த அடிப்படை வேறுபாடுகளின் முக்கியத்துவங்களைப் விளங்கிக்கொள்வது மிக முக்கியமானது.

எத்தனை மில்லியன் ரூபாய்கள் செலவில் நீதியைப் பெறுவது தொடர்பாகவும், குற்றவாளிகள் தண்டிக்கப்படவைப்பது தொடர்பாகவும் விழிப்புணர்வை ஏற்படுத்தவென நாட்டின் மூலை முடுக்கெல்லாம் பல நூறு விழிப்புணர்வுப் பட்டறைகள். கருத்தரங்குகள், கூட்டங்கள் நடாத்தப்பட்டால் என்ன, வெகுஜனத் தொடர்பு சாதனங்களில் கட்டுரைகள் எழுதப்பட்டால் என்ன, வாசிக்கப்பட்டால் என்ன, சாதாரண, வறிய மக்கள நீதி மன்றங்களுடாக நீதியைப் பெற அவர்களுக்கு வழிவகைகள் செய்யப்படாவிடின், அது, உண்மையில், நீதி மறுப்புக்குச் சமனானதாகும். இங்குதான், சட்டத்தரணிகள் மிக முக்கியமாகின்றனர், இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தினால் **UNHCR,** மற்றும் உள்ளுர், சர்வதேச அமைப்புக்களின் உதவியுடன் நடாத்தப்பட்டு வரும சட்ட உதவி மன்ற மும் (**Legal Aid Foundation**) மிக முக்கியமாகின்றது.

பாதிக்கப்பட்ட மக்கள் நீதியை நீதிமன்றங்களுடாகப் பெறுவது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் திட்டங்களை மாத்திரம நடாத்துவது. உண்மையில், மக்கள் பயன் பெற முடியாத, ஒரு போலி நடவடிக்கையென்றே கூற வேண்டும். பாதிக்கப்பட்ட மக்கள் நீதியை நீதிமன்றங்களுடாகப் பெற்றுக்கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ள வழியமைத்துக் கொடுக்கப்படாவிடின், அவர்கள் நீதிமன்றங்களுடாக நீதியைப் பெற முடியாத நிலைதான் தொடரும்.

இங்குதான், வழிகாட்டல்கள், சட்ட உதவிகள என்பன முக்கியமாகின்றன. தூர, கொழும்பு, வேறு இடங்களில் இருந்து வந்தும், உள்ளூர்களில் இருந்தும், நீதி பெறுவது தொடர்பான விழிப்புணர்வுப் பட்டறைகளையும், கருத்தரங்குகளையும், கூட்டங்களையும நடாத்தியபின்னர், பெருவேலைகள் முடிவடைந்துவிட்டன எனக் கருதுவது, உண்மையில், நீதி மறுப்புக்குத் துணைபோகும் ஒரு செயற்பாடே.

மக்கள் நீதியைப்பெற, மக்களுடன் கிராமங்கள் தோறும் செயலாற்றும் கிராம சேவையாளர்கள், மற்றும் சமூக சேவையாளர்களூடாக, மக்களுக்காக மாவட்டங்கள், பிரிவுகள் தோறும் செயற்படும் சட்ட உதவி மன்றங்களுடன் சாதாரண மக்கள் இணைக்கப்படாவிடின், வறிய, நொந்த நிலையில் இருக்கும் மக்கள நீதிமன்றங்களுடாக நீதியைப் பெற முடியாத நிலைதான் உண்மையில் தொடரும்.

இப்படியான பெரும் குறைபாடுகளை நீக்கி, சமூகத்தில் உரிமைகள் மீறல், பாலியல் துன்புறுத்தல், கற்பழிப்புகள், கொலைகள், ஏனையவைகளுக்கு எதிராக வறியவர்களும், இடம்பெயர்ந்த மக்களும் நீதியைப் பெற 2002ஆம் ஆண்டிலிருந்து இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தினால் **UNHCR**, மற்றும் அமைப்புக்களின் உதவியுடன் செயற்படும் சட்ட உதவி மன்றமானது, யாழ் மாவட்டத்தில் செயற்பட்டு வருகின்றது.

யாழ் மாவட்டத்திற்கான தலைமை அலுவலகம, யாழ்ப்பாண நீதிமன்றத்திற்கு அருகில் இலக்கம்:159, 4ஆம் குறுக்குத் தெரு, இல் அமைந்துள்ள மாடிக் கட்டத்தில் அமைந்துள்ளது. தொலைபேசி மூலத் தொடர்பு இலக்கம்: 021 – 221 - 5555 ஆகும். வடமராட்சிப் பகுதிக்கான பிரிவு அலுவலகம்: பருத்தித்துறை நீதி மன்ற வளாகத்தில், வதிரியில் அமைந்துள்ளது.

(02ம் பக்கம் பார்க்க)

வெள்ளி முற்றம்

# இழப்பீடு

— பெரு —

பாலகிருஷ்ணன் அன்று சற்று நேரத்துடனேயே எழுந்து வேலைக்குப் போவதற்காக வட்டுக்கோட்டைக்கருகில் உள்ள தனது கிராமத்தின் பிரதான பஸ் தரிப்பு நிலையத்தில் வந்து நின்றான். அதே சமயம் யாழ்ப்பாணப் பக்கமாகவிருந்து மிதிவண்டியில் வந்து கொண்டிருந்த பரமசிவம் அவனைக் கண்டுவிட்டு ''என்ன பாலா விஷயம் தெரியாதோ'' என்று கேட்டபடி வீதியின் மற்ற கரையில் மிதிவண்டியை நிறுத்தி விட்டு ஒரு காலை நிலத்தில் ஊன்றிக் கொண்டு அர்த்த புஷ்டியோடு அவனைப் பார்த்தார்.

''என்ன விஷயம் அண்ணே'' என்று கேட்டான் பாலகிருஷ்ணன் பஸ்வரும் திசையை நோக்கியபடி.

''இன்றைக்கு நீர் வேலைக்குப் போனாலும் வேலை நடக்குமெண்டு நான் நினைக்கேல்லை. திரும்பி வீட்டை வரவேண்டித்தான் இருக்கும்'' என்று பரமசிவம் மீண்டும் சொன்னார்.

விஷயம் என்னவென்று சொல்லாமல் இப்படி பரமசிவம் ''சஸ்பென்ஸ்'' வைத்துப் பேசிக்கொண்டிருந்தது பாலகிருஷ்ணனுக்கு எரிச்சலைத்தான் உண்டாக்கியது.

ஏற்கனவே ஊரில் பலவிதமான வதந்திகள் பரவிக்கிடந்த நிலையில் இவர் இப்படிப் பேசினால் யாருக்குத்தான் எரிச்சல் வராது?

அன்றைய தினத்திற்கு முதல் நாளும் அதற்கு முதல் நாளும் யாழ்ப்பாண நகரிலும் சுற்றுவட்டாரங்களிலும் நடந்திருந்த அசம்பாவிதங்கள் பற்றி ஏற்கனவே அவன் ஓரளவுக்கு அறிந்திருந்தான்.

ஞாயிற்றுக்கிழமை மாலை நாச்சிமார் கோவிலடியில் இடம் பெற்றிருந்த தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் அன்றைய யாழ்ப்பாண மேயர் . பேசிக்கொண்டிருந் பொழுது அங்கு கடமையில் இருந்த பொலிஸாருக்கும் வேறு சிலருக்குமிடையில் ஏற்பட்ட ''தள்ளுபாடு'' பெரும் குழப்பமாகவே மாறிவிட்டிருந்தது. அப்பொழுது நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒரு சிங்களப்பொலிஸ் கான்ஸ்டபிள் அந்த இடத்திலேயே இறந்து விழுந்ததுடன், காயமடைந்த இருவரில் ஒருவர் (தமிழர்) ஆஸ்பத்திரியில் மரணமடைந்ததுடன் முஸ்லிமான மற்றவர் சிகிச்சைக்குட்படுத்தப்பட்டிருந்ததும் பத்திரிகையில் ஏற்கனவே வெளியாகியிருநதது.

காவலிருந்த பொலிஸாருக்கும் மற்றவர்களுக்குமிடையிலான அந்தத் ''தள்ளுபாடு'' எவ்வாறு ஏற்பட்டது, மூலகாரணமாக இருந்தவர்கள் யார் என்பதெல்லாம் எவருக்கும் தெரிந்திருக்கவில்லை. ஆனால் அந்தச் சம்பவத்தையடுத்து யாழ்ப்பாண நகரில் அடுக்கடுக்காக கட்டவிழ்த்து விடப்பட்டிருந்த பொலிஸ் அட்டூழியங்களையும் அடாவடித்தனங்களையும் அவதானித்தவர்கள் அவை முன்கூட்டியே திட்டமிடப்பட்டு அரங்கேற்றப் பட்டவையென்றே கருதலானார்கள். பொலிஸாரும், கொழும்பிலிருந்து கொண்டுவந்து குவிக்கப்பட்டிருந்த குண்டர்களும் தமது வன்செயல்களை ஆரம்பிப்பதற்கான ஒரு ஆத்திரமூட்டும் சம்பவத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்துள்ளார்கள். கூட்டம் குழப்பத்தில் முடிவுற்ற சில நிமிடங்களிலேயே சுற்றுவட்டாரத்தில் 5 கடைகளும்,4 வீடுகளும் உடைக்கப்பட்டிருந்தன. அச்சத்தில் ஓடிய மக்களின் வாகனங்கள் எரிக்கப்பட்டும் கோயில் தேர்கள் இரண்டு எரியுண்டு போயும் இருந்தன.

இவைபற்றி அறிந்திருந்த பாலகிருஷ்ணனுக்கு, பரமசிவம் என்னத்தை மனதில் வைத்துக் கொண்டு பேசுகிறார் என்பதை அறிய ஆவலாகவிருந்தது. அதனால் '' பரமசிவம் அண்ணை! பஸ் வரப்போகுது விஷயம் என்னவென்று சொல்லுங்கோ'' என்று அவசரப்படுத்தினான். . அதேசமயம் தூரத்தில் இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் வரும் சத்தமும் கேட்கத் தொடங்கியது.அதன் பிறகு தான் பரமசிவம்,''உங்கட கந்தோரையுமல்லவா எரித்துப் போட்டாங்கள் அவங்கள்'' என்று விபரத்தைக் கூறினார். இதைக் கேட்டதும் அவனுக்கு மனம் ''பக்'' என்றது. ஆனால் நல்லவேளை இதயம நின்று விடவில்லை. அதற்குள் பஸ்ஸும் வந்து விடவே பரமசிவம் மிதி வண்டியை உந்தித்தள்ளிக் கொண்டு போய் விட்டார். பாலகிருஷ்ணனும் பஸ்ஸில் ஏறி இடமில்லாமல் நெரிபட்டவர்களோடு தானும் நெரிபட்டுக்கொண்டு பயணமானான்.

யாழ்ப்பாணத்தில் இருந்த அச்சகமொன்றில் அவன் பொறுப்பான பதவியில் இருந்தான். சஞ்சிகைகள், நூல்கள் போன்ற பிரசுரங்களை வெளியிட்டு வந்தது அந்த அச்சகம். அதன் வெளியீட்டுப் பிரிவில் பணிபுரிந்த பால கிருஷ்ணன் ஒரு எழுத்தாளனாகவும் அறிமுகமாகியிருந்தான். அவன் எழுதிய கதைகள், கட்டுரைகள், கவிதைகள், சஞ்சிகைகளில் வந்திருந்தன. ஓரிரு நூல்களும் வெளியிட்டிருந்தான்.

அச்சகத்தின் கீழ் மாடியில் இருந்த முன் அறையில் அவனுடைய அலுவலக அறை அமைந்திருந்தது. அவன் எழுதிய நூல் பிரதிகள், எழுதுவதற்காக சேகரித்து வைத்திருந்த குறிப்புகள், வெளியடுவதற்காக ஆயத்தப்படுத்தி வைததிருந்த எழுத்துப்பிரதிகள் மற்றும் அவனது பாவிப்புக்கென வைத்திருந்த இலக்கிய நூல்கள், ஆங்கில, தமிழ் அகராதிகள் போன்ற அருமையான பெறுமதி மிக்க பொருளகளை அவன் அங்கு வைத்திருந்தான்.

எனவே '' உங்கள் கந்தோரையும் எரித்துப்போட்டாங்கள்'' என்று பரமசிவம் கூறியபோது அவன் திக்பிரமைக்குள்ளானதில் ஆச்சரியமில்லை.

★ ★ ★

தனது வளர்ச்சிக்கும் உயர்வுக்கும் உரமிட்டுதவியிருந்த அந்த அச்சகத்தை அவன் தெய்வம் போல கருதி வந்திருந்தான். எனவே பஸ்ஸிலிருந்து இறங்கியவுடன் நேராக தனது அச்சகத்தை நோக்கி பாலகிருஷணன் சென்றான். அங்கு அவன் கண்ட காட்சி கண்களில் நீர் வழியச் செய்தது.

யாழ்ப்பாணத்தில் மிகப் பிரபல்யமாகவிருந்த அந்த ஸ்தாபனம் தீயிட்டுக் கொளுத்தப்பட்டிருந்தது. மக்கள் திரண்டு வந்து அந்த அவலக்காட்சியைக் கவலையோடு பார்த்துச் சென்றார்கள்.

அச்சியந்திரங்களின் கீழ் ரப்பர் ரயர்களைப் போட்டுக் கொளுத்தி அவைகள் இயங்க முடியாதவாறு எரித்திருந்தார்கள். அச்சடிப்பதற்காக அடுக்கி வைக்கப்பட்டிருந்த கடதாசிக் கட்டுகள் எரிந்து சாம்பலாகிப்போயிருந்தன.

பாலகிருஷணன் தனது அறையை சிரமப்பட்டுத் திறந்து கொண்டு போய் உள்ளே நின்று பார்த்தான்.

முதல் நாள் பாதுகாப்புக்காக அவன் விட்டுச்சென்றிருந்த புத்தம் புதிய ''கஸல்'' மிதிவண்டி தீயில் கருகி வெறும் இரும்புச் சட்டமாகக் காட்சி தந்தது. அவன் அமர்ந்து வேலை செய்யும் மேசை, அதன் மீதிருந்த கோப்புகள்,பேனைகள் மற்றும் பொருட்கள் இருந்த இடம் தெரியாமல் சாம்பலாகிக் கிடந்தன.

பக்கத்திலிருந்த அலுமாரி முக்கால்வாசியும் எரிந்துபோய் எஞ்சியிருந்தவை அவனைப் பார்த்து சிரித்தன. அதற்கு மேல் அந்த அறைக்குள் நிற்க முடியாமல் அசட்டுத்தனமான ஒரு புன்முறுவலை மெலிதாக முகத்தில் படரவிட்டுக் கொண்டு அவன் வெளியில் வந்தான்.

முதல் நாள் இரவில் நடந்தேறியிருந்த சம்பவங்களால் யாழ்ப்பாண மக்கள் திகிலடைந்திருந்தார்கள்.கவலையும் பயமும் அவர்களைப் பிடித்துக்கொண்டிருந்தது. அதனால் அவர்களில் பெரும்பாலானவர்களும் வெளியில் வராமல் வீடுகளுக்குள்ளேயே முடஙகிக்கிடந தார்கள். கடைகள், அலுவலகங்கள், தொழிற்சாலைகள், பாடசாலைகள் எதுவும் செயற்படவில்லை. அவை திறக்கப்படாமல் மூடிக்கிடந்தன. இராணுவ வண்டிகளைத் தவிர வீதிகள் வெறிச் சோடிக்கிடந்தன.

யாழ்ப்பாணத்தின் அறிவுக் களஞ்சியம்- விலை மதிக்க முடியாத பெரும் சொத்து, யாழ்ப்பாண நூல் நிலையத்தின் பெரும் பகுதியும் எரிந்து நாசமாக்கப்பட்டிருந்தது. அங்கு சேகரித்து வைக்கப்பட்டிருந்த 95 ஆயிரத்திற்குமதிகமான நூல் தொகுதிகள் எரிந்து சாம்பாலாக்கப்பட்டிருந்தன.

இந்த இக்கட்டான நாட்களில் தமிழ்ப் பிரதேசங்களின் அன்றாடச் செய்திகளைச் சுடச்சுட வழங்கிக் கொண்டிருந்த யாழ்ப்பாணத்தின் ஒரே ஒரு செய்திப் பத்திரிகையும் அன்றைய திணம் வெளிவரவிலலை. முதல் நாளும் அதற்கு முதல்நாட்களிலும் இடம்பெற்றிருந்த பொலிஸ் அட்டூழியங்களை விபரமாக வெளியிடடிருந்த அப்பத்திரிகை மேற்கொண்டும் செய்திகளை அடுத்தநாள் வெளியிடுவதாக அறிவித்திருந்தது. அந்த அறிவித்தல் நிறைவேறிவிடாமல் இருக்கும் வகையில் அந்தப் பத்திரிகை ஸ்தாபனத் தையே கட்டடம், யந்திர சாதனங்கள மற்றும் பொருட்கள் அனைத்தையும் எரிதது சாம்பலாக்கி விட்டிருந்தார்கள்.

★ ★ ★

இந்தச் சம்பவத்தைத்தொடர்ந்து அவசரகாலச் சட்டமும, இரவு ஊரடங்குச்சட்டமும் அமுலில் இருந்த போதிலும், மாலையானதும் பொலிஸ, இராணுவ அட்டூழியங்கள் தொடர்ந்தன.

யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி சுன்னாகம்,காங்கேசன்துறை பகுதிகளிலும் கடைகள் எரிக்கப்பட்டு கொள்ளையடிக்கப்படட செய்திகள் வந்து கொண்டிருந்தன. 175 வருட பழமையான யாழ்ப்பாண சந்தைக் கட்டடம் முற்றாக எரிக்கப்பட்டு விட்டது. நகரின் முக்கிய இடங்களில் நிறுவப்பட்டிருந்த தமிழ் அறிஞர்களின் சிலைகள் உடைத்து நொறுக்கப்பட்டிருந்தன. யாழ்ப்பாண ஆஸ்பத்திரியின் முன் அமைக்கப்பட்டிருந்த மகாத்தமா காந்தியின் சிலையும் வெறிபிடித்த வன்முறை பொலிஸ் கும்பல்களினால் உடைத்து நொறுக்கப்பட்டிருந்தன.

இவை மட்டுமல்ல, பல இடங்களிலும் அந்தப் பயங்கர நாட்களில் பொதுமக்கள் பொலிஸ் இராணுவ கெடுபிடிகளுக்குள்ளானார்கள். பலர் அடித்தும், துப்பாக்கியால் சுட்டும் கொல்லப்பட்டிருந்தார்கள். அல்லது காயமுற்றார்கள்.

இன்னும் சில தினங்களில் மாவட்ட சபைகளுக்கான தேர்தல்கள் நடைபெறவிருந்தன.அந்தக் காலகட்டத்தில் யாழ்ப்பாண நகரில், சொத்துக்களை இழந்தவர்கள், வீடுகள், கடைகள், வாகனங்கள், தொழிற்சாலைகளை இழந்த அனைவருக்கும் இழப்பீடு வழங்க அரசாங்கம் முன்வந்தது. இழப்பீடுகளுக்கான விண்ணப்பங்களை விசாரிக்கவும் அவை குறித்துத் தீர்மானிக்கவும் என விசாரணை ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது.

பாலகிருஷ்ணன் பணிபுரிந்த நிறுவனமும் இழப்பீடு கோரி விண்ணப்பம் செய்தது. அங்கு பணிபுரிந்த ஊழியர்களின் விண்ணப்பங்களும் அதனுடன் சேர்த்து அனுப்பப்பட்டிருந்தன.

விசாரணைகள் யாழ்ப்பாணம் கச்சேரியில் நடைபெற்றன. விசாரணைக்கு ஏனையவர்களைப் போன்று பாலகிருஷ்ணனும் அழைக்கப்பட்டிருந்தான். அவன் முறை வந்த போது விசாரணை அறைக்குள் சென்றான்.

''உங்கள் கந்தோரில் இருந்த உமது சைக்கிள் எரிந்து போய் விட்டது அப்படித்தானே?'' ஆணையாளர்களில் ஒருவர் கேட்டார்.

''அதிலிருநத வானொலி, கமரா?'' என்று ஆணைக்குழுவின் தலைவர் பகிடியாக கேள்வியை நீட்டினார். மற்றவர்கள் சிரித்தார்கள். அவன் ''இல்லை சேர், காமிரா, ரேடியோ எல்லாம் என் சைக்கிளுடன் எரியவில்லை'' என்றான். தலைவர் தலையைத் தூக்கி அவனைப்பார்த்து விட்டு நீர் போகலாம் என்றார்.

வெளியில் வந்த பாலகிருஷ்ணன் ஆணைக்குழுவின் தலைவர் ஏன் அப்படிக் கேட்டார் என்பதை நினைத்துப் பார்த்தான். ஆனால் அப்போது அது புரியவில்லை.

ஆணைக்குழுவின் விசாரணைகள் முடிந்த பிறகுதான் அந்தப் பகிடி அவனுக்கு விளங்கிற்று. இழப்பீடு கேட்டு மனு செய்திருந்தவர்களில் பலர் தமது வானொலிப் பெட்டிகள், படம் பிடிக்கும் கமராக்கள், கல்குலேட்டாகள் போன்று பெறுமதியான பொருட்களையும் சைக் கிள்களையும் இழந்து விட்டதாகக் குறிப்பிட்டு இழப்பீடு கோரியிருந்தனர். ஒருவர் இருவர் அல்ல பலர் இவ்வாறு தமது பொருள்களைக் குறிப்பிட்டிருந்தனர். ஒரே நிறுவனத்தைச் சேர்ந்த பலர் ஒரே விதமான பொருள்களை இழந்து விட்டதாகக் குறிப்பிட்டிருந்தால் ஆணையாளர்களுக்கு சிரிப்பு வராதா என்ன?

பாலகிருஷ்ணன் தனது புத்தம் புதிய ''கஸல்'' சைக்கிள் எரிக்கப்பட்டிருந்த்தைக் குறிப்பிட்டு அதற்கு ரூ.1500 இழப்பீடு கோரியிருந்தான். அத்துடன்,தனது எழுத்துக்குறிப்புகள், பிரசுரத்துக்கென எழுதி வைத்திருந்த ஆக்கங்கள், தனது நூல்கள் ஒப்புநோக்குவதற்காக வைக்கப்பட்டிருந்த அச்சடிக்கப்பட்ட பிரதிகள் போன்றவை எரிக்கப்பட்டிருந்தமையைக்குறிப்பிட்டு அவைகளுக்கென ரூ.1500 இழப்பீடாகக் கோரியிருந்தான்.

எழுத்து உருப்படிகளை மட்டுமே உற்பத்தி செய்து வெளியிட்டுக்கொண்டிருந்த ஒரு நிறுவனத்தில் எழுத்தோடு மட்டும் சம்பந்தப்பட்டிருந்த ஒருவன் வேறு என்னத்தை இழந்திருக்க முடியும்? வேறு எதற்காக இழப்பீடு கோரியிருக்கமுடியும்?

விசாரணைகள் முடிவுற்று சில நாட்களின் பின் இழப்பீட்டுத் தொகைகளும் அறிவிக்கப்பட்டிருந்தன.

தம்மிடம் இருக்காத பொருள்களை இருந்ததாகக்குறிப்பிட்டு இழப்பீடுகள் கோரியிருந்தவர்கள் மனங்களில் மகிழ்ச்சி பொங்கும் விதத்தில் இழப்பீட்டுத்தொகைகள் அறிவிக்கப்பட்டிருந்தன.

பாலகிருஷ்ணனுக்கும் இழப்பீடு கிடைத்திருந்தது. எரிந்து போன அவனது சைக்கிளிற்குரிய தொகையே அது.

ஆனால் மனதார அவன் இழந்துவிட்டிருந்த அறிவு சார்ந்த, உணர்வு பூர்வமான பொருள்கள் பற்றி ஆணையாளர்கள் அலட்டிக்கொண்டதாகவே தெரியவில்லை. அவைகளின் மதிப்பு அவனுக்கு மட்டுமே தெரியும்.

(உண்மைகள் கலந்த கற்பனை)



# கலைகளின் களஞ்சியம் அஸ்தமித்து விட்டது

## வீரமணி ஐயரின் மறைவுக்கு இரங்கல்

யாழ்ப்பாண மண்ணின் மலையொன்று சரிந்துவிட்டது.தமிழ்க் கலைகளின் பாதுகாவலனாக அதன் வளர்ச்சிக்கு உரமிடும் உறுதியாளனாகக் கடந்த பல தசாப்தங்களாகச் சேவையாற்றிய கலைகளின் களஞ்சியம் அஸ்தமித்து விட்டது. இலங்கையில் மாத்திரமல்லாது இந்தியா மற் றும் உலக நாடெங்கும் தனது ஈடிணையற்ற திறமையால் நிகரற்ற புகழினைப் பெற்றுக் கொண்டவர் மகாவித்துவான் ந.வீரமணிஐயர் அவர்கள்.

அன்னாரின் மறைவையொட்டி யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி தி.கமலநாதன் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும், இந்தியாவின் பெரிய பெரிய கலைஞர்கள் எல்லாம் மதிக்கும்,வணங்கும் மாமனிதராக வாழ்ந்தவர் அமரர் வீரமணி ஐயர் அவர்கள். அவரினால ஆக் கப்பட்ட ஊஞ்சல் பாடல்கள் பல கோவில்களிலே ஒலித்த வண்ணமுள்ளன. தமிழ் நாட்டின் மயிலாப்பூர் கபாலீஸ்வரர் ஆலயத்தில் இவரது பாடல் கல்வெட்டாக்கப்பட்டு, ''ஆக்கம் வீரமணி ஐயர் யாழ்ப்பாணம்'' என்று எழுதப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளது.ஐயா அவர்களால் ஆக்கப்பட்ட நாட்டிய, நாடகங்கள் ஒவ்வொனறும் காவியங்களாக மதிக்கப்படுகின்றன. இவையெல்லாம் கதறியழ ஐயா நின்றது போல்,நின்று நெடுந்தூரம் சென்றமை இயற்கையின் இரக்கமற்ற கொடுமை.ஐயா அவர்களால் ஆக்கி மெட்டமைத்துப் பாடித்தரப்பட்ட எமது கல்லூரிக் கீதம் தினந்தோறும் கல்லூரியில் ஒலிக்கப்படும் போது அவர் எம்மை விட்டு எங்குமே செல்லமுடியாது, செல்லவும் மாட்டார் நாமும் விட மாட்டோம் என்றுள்ளது. (உ)

## சமாதான நீதவானாக நியமனம்



மாவடி அநுராதபுரத்தைப் பிறப்பிடமாகவும் இருபாலை கிழக்கு முனி கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய பொதுச்சுகாதார உத்தியோகத்தர் கி.தங்கவடிவேல் சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர், இருபாலை கிழக்கு ஸ்ரீ.முருகன் சனசமூக நிலையம், யாழ்.கெயர்ஸ்தாபன சமூக அபிவிருத்தி மன்றம், வலி-கிழக்கு பிரதேச சபை ஆகியவற்றின் நிர்வாக உறுப்பினராகச் செயற்பட்டுவருகின்றார்.




சுழிபுரத்தைச் சேர்ந்த வட்டுக்கோட்டை முன்னாள் தபாலதிபரும், சுழிபுரம் விவசாய சம்மேளனத் தலைவரும், பறாளை ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில், சாத்தாவோலை சம்புநாதேஸ்வரம், சுழிபுரம் ஐயனார் கோவில் ஆகியவற்றின் செயலாளருமாகிய கிருஸ்ணர்-பூபாலசிங்கம் யாழ். மேலதிக நீதிபதி பி.சுப்பிமணியம் முன்னிலையில் அண்மையில் சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் சிறந்த சமூக சேவையாளரும் சிறந்த பண்பாளராகவும் திகழ்ந்து வருகிறார்.



இலகடி வீதி கரவெட்டி மத்தியைப் பிறப்பிடமாகவும் கரணவாய் தெற்கு வீரப்பதிராயனை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை பாலசிங்கம், அண்மையில் யாழ். மாவட்ட மேலதிக நீதிபதி பி.சுப்பிரமணியம் முன்னிலையில் யாழ்.மாவட்ட சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.



வண்ணார் பண்ணையைச் சேர்ந்த சுந்தரம் செல்வரத்தினம் அண்மையில் மாவட்ட நீதிபதி பி.சுப்பிரமணியம் முன்னிலையில் சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் யாழ். இந்துக்கல்லூரியின் பழைய மாணவரும், வலி-கிழக்கு தென்பகுதி ப.நோ. கூ.சங்க நீர்வேலிக் கிளை உறுப்பினரும், கோப்பாய் தெற்கு அருள்மிகு ஞானவைரவர் தேவஸ்தான நிர்வாக ஆலோசகரும், சமூகசேவையாளருமாவார்.

## உதவுதொகை பெறுவோர்க்கு புத்தாடை விநியோகம்

(தொல்புரம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள அரசாங்கத்தின் சமூகசேவை உதவு தொகையைப் பெற்றுக்கொள்ளுபவர்களுக்கு இந்து சமய விவகார அமைச்சு தீபாவளி தினத்தன்று புத்தாடைகளை வழங்கவுள்ளது.

பிரதேச செயலர் பிரிவு ரீதியாக அமைந்துள்ள இந்து ஆலயங்களை மையமாகக் கொண்டு இப் புத்தாடைகள் விநியோகிக்கப்படவுள்ளன.

ஆயினும்,தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை அதிகமாக இருப்பின் அந்தந்த கிராம அலுவலர் பிரிவு ரீதியாக அமைந்துள்ள இந்து ஆலயங்களில் வைத்து புத்தாடை வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடாபான சுற்று நிருபத்தை யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச செயலர்களுக்கு இந்து சமய விவகார அமைச்சு அனுப்பிவைத்துள்ளது. (உ-70)

## தமிழீழ நாடாளுமன்றக் கட்டடம் வன்னிப்பகுதியில் நிர்மாணம்

### ஆங்கிலப் பத்திரிகை தகவல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழீழ நாடாளுமன்ற கட்டடத் தொகுதியை வன்னியில் நிர்மாணித்து வருவதாக கொழும்பில் இருந்து வெளியாகும் ஆங்கிலப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தப் பத்திரிகைச் செய்தியில், கிளிநொச்சிக்கும்-முல்லைத்தீவுக்கும் இடையில் இக்கட்டடம் அமைக்கப்பட்டுவருகின்றது என்று குறிப்பிடப்பட்டுள்ளதுடன்,

இது பற்றி தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை தமது செய்தியாளர் தொடர்புகொண்டு கேட்டபோது, இது தமிழீழ நாடாளுமன்றத்திற்கான கட்டடத் தொகுதியாக இருக்கலாம் என்று கூறியிருப்பதாகவும் அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-63,10)

# செய்தித் துளிகள்

## உதவுபொருட்கள்

(வடலியடைப்பு)

தென்மராட்சியில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து தற்போது அப் பகுதிகளில் மீளக் குடியேறியுள்ள குடும்பங்களுக்கு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகம் அவ்வப்பகுதி கிராம சேவகர்களூடாக உதவு பொருட்களை வழங்கி வருகின்றது. (தி-21)

## பொதுமலசலகூடம்

(பொன்னாலை)

சங்கானைச் சந்தையில் பொது மலசலகூடம் ஒன்றைஅமைக்கும் பணிகளில் சுழிபுரம் பிரதேசசபை ஈடுபட்டுள்ளது.

மிக நீண்டகாலமாக இச்சந்தையில் மலசலகூடம் இல்லாதிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-49)

## நிவாரண முத்திரை விநியோகம்

(பொன்னாலை)

சங்கானைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராமசேவகர் பிரிவுகளில் புதிய உலர் உணவு நிவாரண முத்திரைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ் உலர் உணவு முத்திரைகள் ஒருவார காலத்திற்குள் விநியோகிக்கப்பட வேண்டியிருப்பதால், மக்கள் தமது உலர் உணவு நிவாரண முத்திரைகளை விரைவாகப் பெற்றுக்கொள்ளுமாறுகேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (உ-49)

## தாய் சேய் சிகிச்சை

(கல்வயல்)

மட்டுவில் வடக்கில் உள்ள வேற்பிள்ளை சனசமூக நிலையம் போரினால் மிகவும்பாதிப்படைந்துள்ளமையினால் முன்னர் அங்குஇடம் பெற்றுவந்த தாய் சேய் சிகிச்சையினை நடத்த முடியாதுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால்,இப்பகுதிமக்கள் தூர இடங்களுக்குச் சென்றே சிகிச்சை பெறவேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-111)

## "விளக்கு" வெளிவந்தது

(யாழ்ப்பாணம்)

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் வெளியீடான ''விளக்கு'' ஒக்டோபர் மாத இதழ் வெளிவந்துள்ளது.

அகில உலக ஆசிரியர் நாள் சிறப்பிதழாக வெளிவந்துள்ள இந்த இதழில் கட்டுரைகள், கவிதைகள், சிறுகதை, நேர்காணல், கருத்துத் திரட்டல் மற்றும் தொடர்கள் ஆகியன அடங்குகின்றன. (உ-7)

## நிதி ஒதுக்கீடு

(பொன்னாலை)

சங்கானைப் பிரதேச செயலர் பிரிவில் அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் கருத்திட்டத்தின் கீழ் இந்த ஆண்டுக்கான அபிவிருத்தித் திட்டங்களுக்கென நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம், 40 மலசலகூடங்களை அமைப்பதற்கென 6லட்சம் ரூபாவும், 7 பொதுக் கிணறுகளைத் திருத்தி அமைப்பதற்கென 3 லட்சத்து 7ஆயிரம் ரூபாவும், குழாய்க் கிணறு ஒன்றினை அமைப்பதற்கு 37 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. (உ-49)

## சிரமதானம்

(வடலியடைப்பு)

முதல் பெண் மாவீரர் 2ஆம் லெப் மாலதியின் நினைவு தினத்தை முன்னிட்டு கோப்பாய் தரவைப் பகுதியில் அமைந்துள்ள மாலதி நினைவாலயப் பகுதியை பொது மக்கள் சிரமதானம் மூலம் துப்புரவு செய்துள்ளனர். (உ-21)

## மலசலகூட வசதி

(மட்டுவில்)

சரசாலை தெற்கு J/316 கிராம அலுவலர் பிரிவில் உள்ள வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 20 குடும்பங்களுக்கு மலசலகூடம் அமைப்பதற்குரிய பொருட்களை இந்து கலாசார அமைச்சு வழங்கி வருகின்றது. (உ-115)

## குடிநீர்க் கிணறு புனரமைப்பு

(கந்தர்மடம்)

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவில உள்ள J/ 52 கரம்பொன் கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் நீண்டகாலமாகத் திருத்தப்படாதிருந்த குடிநீர்க்கிணறைப் பட்டினிக்கெதிரான நிறுவனம் புனரமைத்துள்ளது.

இதனால் அப்பகுதி மக்கள் மட்டுமல்லாது அயல் கிராமத்து மக்களும் பெரிதும் நன்மையடைந்துள்ளனர். (உ-112)

## கொல்களத்தை இடமாற்றக் கோரிக்கை

(பொன்னாலை)

யாழ்.வீதியிலுள்ள காக்கைதீவுப் பகுதியில் வலி.தென்மேற்குப் பிரதேச சபையினால் அமைக்கப்பட்ட கொல்களத்தை வேறு இடத்திற்கு மாற்றுமாறு அவ்வீதியால் நடமாடும் மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இக்கொல்களம் வீதிக்கு அண்மையில் இருப்பதால் மழைக் காலங்களில் துர்நாற்றம் வீசும் என்பதோடு, சுகாதாரச் சீர்கேடு ஏற்படும்எனவும் அப் பகுதி மக்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-49)

## 20 இலட்சம் ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறையில் உள்ள J/ 39 கிராம அலுவலர் பிரிவுக்கு சுமார் 20 லட்சம் ரூபா நிதி அரசினால் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்நியில் இருந்து ஊர்காவற்றுறை கிழக்குப் பகுதி வீடமைப்புத்திட்ட நிர்மாணத்துக்கு 9 லட்சத்து 18 ஆயிரத்து 995 ரூபாவும் மலசலகூட வசதிகளுக்கு 3 லட்சத்து 15ஆயிரத்து 379ரூபாவும் சனசமூக நிலையத்திற்கு 5லட்சத்து 37 ஆயிரத்து 650ரூபாவும் மற்றும் ஊர்காவற்றுறை கிழக்கு சமூக மட்ட ஊக்குவித்தல் செயற்பாடுகளுக்கு 1லட்சத்து 30ஆயிரத்து 750ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. (உ-10)

## லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநர் வடமராட்சி விஜயம

(பருத்தித்துறை)

லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநர் லயன் டாக்டர்.றோகான் பெரேரா லயன் சீமாட்டி பிரியனிதா சகிதம் இம்மாதம் 11ஆம் திகதி வடமராட்சி லயன்ஸ் கழகத்திற்கு உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இவ்வைபவம் வடமராட்சி லயன்ஸ் கழகத்தலைவர் லயன் பி.கதிரமலை தலைமையில் லயன் கே.தணிகாசலத்தின் நவிண்டில் இல்லத்தில் நடைபெறவுள்ளது. (உ-52)

## மாணவர் பாவனைக்கு தளபாடங்கள்

(மட்டுவில்)

நிக்கொட் நிறுவனம் யாழ். மட்டுவில் வடக்கு கமலாசினி வித்தியாசாலை மாணவர்களின் பாவனைக்கென 20 மேசை,கதிரைகளை வழங்கியுள்ளது.

அத்துடன், ஆசிரியர்களின் பாவனைக்கென 5 மேசைகளும் வழங்கப்பட்டுள்ளன. (உ-115)

## வாயில் வளைவு அன்பளிப்பு

(மந்துவில்)

கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்திற்கு பாடசாலைப் பெயர் பொறிக்கப்பட்ட வாயில் வளைவை மக்கள் வங்கி அன்பளிப்பாக வழங்கியுள்ளது. (உ-54)

## சிறுவர் நாடகப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ.கல்விவலயப் பாட சாலைகளுக்கு இடையிலான சிறுவர் நாடகப்போட்டி நாளை சனிக் கிழமை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. (உ-7)

## மாடுகளுக்கு தடுப்பூசி

(தொல்புரம்)

வட்டுக்கோட்டை கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தினால், கால்நடைகளுக்கு தொண்டை அடைப்பான் தடுப்பூசி போடப்பட்டு வருகின்றது.

இத் தடுப்பூசியை தங்கள் மாடுகளுக்கு ஏற்றாத பண்ணையாளர்கள் அலுவலகத்தில் தொடர்பு கொண்டு தடுப்பூசியை ஏற்றிக் கொள்ளுமாறும், இத்திட்டமானது இம் மாதம் 15ஆம் திகதி வரை மட்டுமே நடைமுறையில் உள்ளதாகவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (உ-70)

## நவக்கிரக ஹோமம்

(யாழ்ப்பாணம்)

இணுவில் கந்தசுவாமி கோவிலில் நவக்கிரக ஹோமம் நாளை சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. (உ-8)

## திருமலையில் வீடுவீடாக தேடுதல்

(திருகோணமலை)

திருகோணமலை உவர்மலைப் பகுதி நேற்று முன்தினம் காலை திடீரென சுற்றிவளைக்கப்பட்டு வீடு வீடாகத் தேடுதல் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸாரும் இராணுவத்தினரும் கூட்டாக மேற்கொண்ட இத் தேடுதல் நடவடிக்கைகளின் போது வீடுவீடாகச் சென்ற படையினர் குடுமப விபரங்களைக் கேட்டு அறிந்து கொண்டபோதும் எவரும் கைது செய்யப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## பொலிஸாரினால் 273 பேர் சித்திரவதை

(கொழும்பு)

273 பேர் மனிதாபிமானமற்ற முறையில் பொலிஸாரினால் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதாக பொலிஸ் தலைமை அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இம்முறைப்பாடுகளின் அடிப்படையில் 25 பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளதாக விசேட விசாரணைப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் கீர்த்தி கஜநாயக்க தெரிவித்துள்ளார். (தி-61)

## நூல் வெளியீடு

(பருத்தித்துறை)

பண்டிதர் கே.வீரகத்தியின் வாழ்க்கை வரலாறு பற்றிய நூல் ஒன்று துன்னாலை மகளிர் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தினால் வெளியிடப்படவுள்ளது. (உ-52)

## விதவைகளுக்கு உதவி

(யாழ்ப்பாணம்)

கோணப்புலம் நலனோம்பு நிலையத்தில் உள்ள கணவனை இழந்த பெண்களுக்கு ''மூவி மொண்டோ'' நிறுவனம் 3ஆயிரம் ரூபா பெறுமதியான கோழிக்கூடு மற்றும் 10 முட்டையிடும் கோழிகள் எனபவற்றை வழங்கியுள்ளது. (உ)

## வீடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகு வழங்கி வரும் திரைப்படக் காட்சித் தொடரில், அருண் கோப்கரின் நெறியாள்கையில் உருவாக்கப்பட்ட ''கதா தோன் கன்பட்ரான்ச்சி'' என்னும் மராத்தி மொழிப்படம், தமிழ் உப தலைப்புக்களுடன் எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணிக்கு யாழ்.பல் கலைக்கழக புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

புகழ் பெற்ற ரஷ்ய எழுத்தாளர் ''நிக்கோலய் கொகோல் '' இன் மூலக் கதையைத் தழுவி உருவாக்கப்பட்டுள்ள இத்திரைப்படத்தை ஆர்வலர்கள் எவரும் கண்டுகளிக்கலாம் என புறநிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (உ)

# பெண் விடுதலையோடுதான் தேச விடுதலை முழுமை பெறும்

## தமிழீழ பெண்கள் எழுச்சி நாளை முன்னிட்டு தமிழீழஅரசியல்துறையின் மகளிர்பிரிவு அறிக்கை

இன்று தமிழீழப் பெண்களின் எழுச்சிநாள். தமிழ் சமூகத்தின் வரலாற்றில் முதன் முதலாக ஒரு பெண் புரட்சிக்கு வித்தான புனித நாள். இந்த நாளானது தமிழ் மக்கள் அனைவருக்கும் அந்த வீர மகளின் இலட்சியத்தை, தமக்குள் மீண்டும் பட்டை தீட்டிக்கொள்ளவும் இளைய தலைமுறையினரிடம் பதியமிட்டு வளர்க்கவும் பொருத்தமான எழுச்சிநாள்.

நீண்ட கால அடிமை வாழ்வில் சிக்குண்டு போயிருந்த எமது சமூகத்திடம் வாழ்வியலின் யதார்த்த நெறிமுறைகள் சிதைந்து போனது. வெறுமனே இது தான் வழமை என்று சொல்லப்படுகின்ற வழக்காறுகளும சம்பிரதாயங்களும் சடங்குகளும் மூடநம்பிக்கைகளும் போலித்தன்மைகளும் மலிந்து போய் உண்மைக்கான தேடல் அற்றுப்போனது. இவ்வாறு வலுவிழந்து வழிதடு மாறி நின்ற தமிழ்ச் சமூகத்தின் இயங்கு நிலையில் தமீழீழ விடுதலைப் போராட்டத்தின் முகிழ்ப்பானது, புதிய அதிர்வுகளை ஏற்படுத் தியது புது இரத்தம் பாய்ச்சியது. புதிய திசையில் வழிநடத்தியது. விடுதலை என்ற சொல்லையும், அதன் வீரியத்தையும் தமிழ் மக்களின் மனங்களில் ஆழப்பதித்தது. உண்மையில் விடுதலை என்பதென்ன அந்நிய ஆக்கிரமிப்பில் இருந்து நிலத்தை மட்டும் மீட்டெடுப்பதா? இல்லை. அனைத்துவிதமான அடிமைத்தனங்களில் இருந்தும், சாதிமத வேறுபாடுகளில் இருந்தும் பெண் ஒடுக்குமுறைத்தனங்களில் இருந்தும், சமூக ஏற்றத்தாழ்வுகளில் இருந்தும் இனத்தை மீட்டெடுத்து சகல நிறைவோடும் நாட்டைக் கட்டியெழுப்புதல், என்று விடுதலையின் அர்த்தம் ஆழமானது. அந்த அர்த்தபரிமாணத்தில் பார்க்கும்போது, எமது விடுதலைப் போராட்டமானது, ஆழமும் விரிவும் கொண்டதான மானிடத்தின் புரட்சியாக இன்று பூமிப்பந்தில் பரிணமித்துள்ளது.

சமூகத்தில் இணைபிரியாத அங்கமான பெண்களைப் புறக்கணித்து விட்டு முன்னெடுக்கப்படும் எந்தப் போராட்டமும் தேசிய முழுமையைப் பெறமுடியாது என்ற எமது தேசியத் தலைவரின் ஆழ்ந்த நோக்கானது தமிழீழப் பெண்களின் புரட்சிக்கு வழிசமைத்தது. இதுதான், இப்படித்தான் என்ற சமூக வார்ப்பில் இருந்து பெண்ணின் இயல்பை சுயத்தின் தேடலாக ஆளுமையின் மீதான காதலாக முன்னகர்த்தியது. பெண்மையைப்பற்றிய சமூகத்தின் பார்வையும், புரிதலும் மாற்றம் பெறவேண்டுமாயின் அது எங்கே ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற கேள்விக்கு நாளாந்த வாழ்வின் நடைமுறைகளில் இருந்தும் தேவைகளில் இருந்தும் சராசரியான வாழ்வின் மீதான விருப்பில் இருந்தும் வாழ்வதற்கான பிரச்சினைகளில் இருந்தும்தான் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற பதிலையே வரலாறு எமக்கு உணர்த்தியது. இலகுவில் புரிபடாத தத்துவங்களை ஆய்வு செய்து பதில்களைத் தேடுவதற்கான அவகாசங்களோ சாத்தியப்பாடுகளோ உண்மையில் எந்தத் தமிழ்ப்பெண்ணுக்கும் இருக்கவில்லை. உயிர் வாழ்வதற்கான சாத்தியப்பாடுகளே தென்படாத பொழுது வரைவிலக்கணங்களை மட்டுமே வைத்துக் கொண்டு வெறும் கனவு காண்பது இருப்பையே தொலைத்துவிடும் நிலைக்கு இட்டுச் செல்லவும் கூடும். எனவே தான் வாழ்வின் நடைமுறைகளின் மூலமாகவே மாற்றத்திற்கான புதிய வாசல்களைத்திறக்கவும் பொருத்தமான புதிய தத்துவங்களை உருவாக்கவும் முடியும் என்பதை எமது போராட்ட வரலாறு கற்றுத் தந்தது.

சமூகத்தில் காலாகாலமாக நிலவிவந்த பெண்மையைப் பற்றிய கருத்துருவாக்கங்கள் விடுதலைப் போராட்டத்தில் இணைந்த பெண்களின் செயற்பாடுகளால் மாற்றம் கண்டன. தன்னம்பிக்கையும், தனித்த ஆளுமையும் பெண்ணின் இயல்பான விடயம் என்பதனை சமூகம் புரிந்து கொள்ளத் தொடங்கியது. போரின் வெற்றியே போராட்டத்தின் வெற்றியைத் தீர்மானிக்கும் காலகட்டத்தில் எம் இனம் நின்றபோது சமூக வாழ்வியக்கமே போராட்ட சக்தியாக பரிணமித்த போது, பெண்களும் இயல்பாக போரில் பங்கேற்றனர். அணிகளைத் தலைமையேற்று நடத்தினர். எல்லைப் படையாக, துணைப் படையாக, கிராமியப் படையாக கள முனையின் முன்னணிப் படையணிகளாக, கரும்புலி அணிகளாக, கடற்புலிகளின் அணிகளாக, நிர்வாக அரசியலின் அணிகளாக முழுமையான தேச விடுதலைப் போராட்டத்தில் சமபங்கேற்றனர். ஒருகாலத்தில் வீட்டுக்கு வெளியேவராத பெண்கள் போராட்ட வெற்றிகளை மக்களுக்குச் சமர்ப்பித்து வெற்றிக்கான விலைகளாக தம்முயிர்களை மண்ணுக்குச் சமர்ப்பித்து துயிலும் இல்ல விதைகுழிகளில் நிரந்தர வாழ்வை தேடிக்கொண்ட போது, வீதிகளில் தன்னம்பிக்கையோடு பல பணிகளையும் சுமந்து கம்பீரமாக வலம் வந்தபொழுது ஆண் பெண் என்ற பாலியல் வேறுபாடுகளுக்கு அப்பாலான மனித ஆளுமையின் மகத்துவத்தை சமூகம் புரிந்து கொள்ள வேண்டிய சூழ்நிலை தோற்றுவிக்கப்பட்டது.காலத்தின் தேவைக் கூடான இந்த மாற்றம் பெண்மையைப்பற்றிய பழைய பிம்பங்களை உடைத்து நொருக்கியது, புதிய பார்வையை சமூகத்தின் மீது படரச் செய்தது.

விடுதலைப் போராட்டத்தின் சமூக விடுதலை பற்றிய ஆழந்த நோக்கிற்கும் அப்பால் இன்னும் பெண்மை பற்றிய பல புரிந்து கொள்ளாமைகளும் அவநம்பிக்கைகளும் இருக்கத்தான் செய்கின்றன. அவைகளே சமூகத்தில் சீர் செய்யப்படாத சிக்கல்களாகவும் மலிந்து போய்க்கிடக்கின்றன. இங்குதான் இன்னுமொரு கேள்வி எழுகின்றது. ஒரே தேசத்தில் ஒருபெண் ஆளுமையின் உச்சத்தை எட்டவும் அதேவேளை இன்னுமொரு பெண் அவலத்தில் உழலவும் எப்படிச் சாத்தியமாகின்றது. உண்மையில் இதுதான் தேசம் முழுமையாக மீட்கப்படாத இன்றைய சூழ்நிலையில் சாத்தியப்படுகின்ற நிலைமையாகவும் இருக்கின்றது. ஏனெனில் அடிப்படையில்மாற்றம் நிகழ வேண்டியது மன உலகில் என்ற வகையில் எம் இனத்தின் நிலத்தை மட்டுமல்ல மனத்தையும் ஆக்கிரமிக்கவும் ஆட்டிப்படைக்கவும் எத்தனையோ விடயங்கள் எதிரியால் திட்டமிட்டே கட்டவிழ்த்து விடப்படுகின்றன. மனித வாழ்வுக்கு எதெது தேவையோ அவைகள் தடைசெய்யப்பட்ட போதிலும் மனித வாழ்வை எவை எவை சீரழிப்பவையோ அவைகள் தாராளமாகவே வழங்கப்பட்டன. இளைய தலைமுறையினரின் சிந்தனையில் அடிமைச்சுகத்தை வழங்கி புரட்சியின் சுகத்தைப் புறந்தள்ளுவதே இதன் உள் நோக்கமாய் இருந்தது. இது ஓரளவேனும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் எதிரிக்கு சாத்தியமாகவும் இருந்தது. இன்னொரு புறத்தில பார்க்கும் போது மாற்றத்திற்கான முக்கிய களமாக விளங்குவது கல்விச்சாலைகள். எமக்கான கல்வியை நாமே தீர்மானிக்காத வரையில் தென்னிலங்கையின் பரீட்சைத் தாள்களுக்கு எமது இளைய தலைமுறையைத் தயார் படுத்தும் களமாக மட்டுமே எமது பள்ளிகள் இருக்க முடியும். எனவே தமிழீழத்தின் தேசிய ஆன்மாவைக் கண்டறியும், கட்டியெழுப்பும் அறிவியல் கூடங்களாக இவை எப்படி மாற முடியும்? ஒற்றை மரத்தின் கீழும், ஓலைக் கொட்டகையின் கீழும், புழுதிக்கட்டாந்தரையிலும் மட்டுமல்ல எம்கல்வியின் அவலம். எல்லாமே பற்றாக்குறையாகிவிட்ட பள்ளிவாழ்வு நம்எதிர்கால சந்ததியை எத்தகைய மாற்றத்திற்கு இட்டுச் செல்லும். தேசத்தை நேசிக்கவும் தேசத்தின் வளங்களை ஆய்வு செய்யவும் அதனை வளர்த்தெடுக்கவும் எல்லாவற்றுக்கும் மேலாக சமூகத்தின் பிற்போக்குத் தளைகளை அண்டவிடாத புரட்சிக் கூடங்களாக புதிய மனோபாவத்தோடு இளைய தலைமுறையை தேசத்தின் சிற்பிகளாக உருவாக்கும் இடமாக, தேசமே தொழுது போற்றும் புனிதமும் புரட்சியும் குடியிருக்கும் கோயிலாக, எமது பள்ளிகள் மாறினால் சமூகத்தின் மன உலகு நிச்சயம் மாறும் எனவே தேசம் எம் வசப்படும் போது எம் தேசியத் தலைவரின் சிந்தனையில் தேசம் உருப்பெறும் பொழுதுதான் அனைத்துப் பெண்களும் ஆளுமையின் உச்சத்தை அடைவது சாத்தியமாகும்.

இன்று நிலைவிவரும் சமாதானச் சூழல் காரணமாக தாயகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் வாழ்கின்ற பெண்களின் பிரச்சினைகளை கண்டறிகின்ற சந்தர்ப்பங்கள் கிடைத்தன. இவ்வாண்டின் கிராமந் தோறும் பிரதேசங்கள் தோறும் மாவட்டங்கள் தோறும் நாம் சந்தித்த பெண்களின் ஆழ்மன வெளிப்பாடு என்பது இதுவரை காலமும் புரிந்தும் புரியாமலும் அவர்களுக்குள்ளோ புதையுண்டு போயுள்ள உணர்வுகளின் வீச்சாக மனங்களின் பிரளயமாக சங்கமித்தது. அவர்களுக்குள்ளேயிருந்த ஆதங்கங்களும் ஆசைகளும், தேடல்களும் தீர்மானங்களும் சமூகத்தின் ஒட்டு மொத்தமான அபிலாசையாக தேசத்தின் விடுதலை என்பதே அனைத்தில் இருந்தும் விடுதலையைப் பெற்றுத் தரும் என்ற பிரகடனமாக அமைந்தது உண்மையில் இதுவரை காலமும் நெஞ்சுக்குள் நெருப்பை எரித்துக் கொண்டு அடுப்போடு கிடந்த நெருப்புக்கள் ஒன்றுகூடி விடுதலைத் தீயெடுத்த பெருவிழாவாகத்தான் பெண்களின் சங்கம நிகழ்வுகளை எம்மால் இனங்காண முடிந்தது. தாயகத்திற்கு வெளியே புலம்பெயர்ந்து வாழும் பெண்களின் பிரச்சினைகள் இன்னும் வித்தியாசமானவை வழக்கமான தமிழ்ச் சமூகத்தின் மனோபாவத்திற்கும் அந்நிய நாட்டு சமூகத்தின் நடைமுறைகளுக்கும் இடையே சிக்கித் தவிக்கும் பெண்கள் அவர்கள். இருப்பினும் அவர்களின் தேசத்தின் மீதான நேசிப்பு, தேச விடுதலைக்கான உழைப்பு உன்னதமானது. அவர்களின் பிரச்சினைகளுக்கான தீர்வும் தமிழீழ தேச விடுதலையின் வேரிலேயே தங்கியுள்ளது.

ஒட்டுமொத்தமாக சொல்வதானால் தமிழீழப் பெண்கள் அனைவரும் தேசிய விடுதலைப் போராட்டத்தின் சமபங்காளர்களாக இணைந்து செயற்பட வேண்டிய தேவை தற்போது அனைவராலும் ஆழமாக உணரப்படுகிறது. ஏனெனில் இவ்விடயமானது முக்கியமான இரு கட்டங்களை உள்ளடக்கியுள்ளது.

1.தேசவிடுதலை என்பது பெண்களையும் இணைத்துக் கொள்ளும் போதுதான் முழுமை பெறும்.
2.சமூக விடுதலையின் முக்கிய

(2-ம் பக்கம் பார்க்க)

# டிரக் - பஸ் மோதி கோர விபத்து
# 54 பள்ளி மாணவிகள் ஸ்தலத்தில் பலி
## விடுமுறையைக் கழித்துவிட்டுத் திரும்புகையில் சம்பவம்

(ஜகார்த்தா)

பாடசாலை மாணவிகளை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்று விபத்துக்குள்ளானதில் 54 மாணவிகள் பரிதாகரமாக உயிரிழந்ததுடன் பலர் காயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் இந்தோனேஷியாவின் பாலித்தீவிலிருந்து 800 கிலோமீற்றர் தொலைவிலுள்ள ஜோஹாயகராட்டா நகரில் நேற்று இடம் பெற்றது.

இச் சம்பவத்தில் உயிரிழந்த மாணவிகள் அனைவரும் தமது விடுமுறையை பாலித்தீவில் உல்லாசமாகக் களித்துவிட்டு வீடுதிரும்பிக் கொண்டிருந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. விபத்துக்குள்ளான பஸ்ஸின் சாரதியும் நடததுனரும் அதிஷ்டவசமாக உயிர் தப்பியுள்ளனர். விபத்துக் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். மாணவிகளை ஏற்றிச் சென்ற பஸ் முன்னால் சென்று கொண்டிருந்த டிரக் வண்டியுடனும் மினிபஸ்ஸுடனும் மோதித் தீப்பற்றிக் கொண்டதிலேயே இக் கோர விபத்து நிகழ்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். (பி-2)

# ஊழல் மலிந்த நாடுகளில் இந்தியாவுக்கு 82-வது இடம்

(சிங்கப்பூர்)

உலகில் உள்ள ஊழல் நாடுகளில் உயர்ந்த இடத்தில் இந்தியா உள்ளது. உலகிலேயே குறைவாக லஞ்ச, ஊழல் உள்ள நாடுகளின் பட்டியலில் 82-வது இடத்தில் இருக்கிறது பாரதம்.

ஆனால், இந்தியாவின் அண்டை நாடான வங்கதேசம், ஊழல் நாடுகளின் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்துச் சாதனை புரிந்துள்ளது. தொடர்ந்து 3-வது ஆண்டாக அது அச்சாதனையைப் படைத்துள்ளது.

ஊழல் அற்ற நாடுகளின் பட்டியலில் இந்தியாவுக்குப்பின்னால் 92வது இடத்தில் இருக்கிறது பாகிஸ்தான், ஆனால் சீனாவிலும், இலங்கையிலும் இந்தியாவைவிட இலஞ்ச ஊழல் குறைவாக இருக்கிறது. அவை 66வது இடத்தில் இருக்கின்றன.

உலகில் ஊழல் இல்லாத நாடு என்ற பெருமையை பின்லாந்து, ஐஸ்லாந்து, டென்மார்க் ஆகிய நாடுகள் பெற்றுள்ளன.

இத்தகவலை ஜேர்மனியின் பெர்ளின் நகரத்தில் இருந்து செயற்பட்டு வரும் டிரான்ஸ்பரன்ஸி (வெளிப்படையான செயற்பாடு) இன்ரர்நஷனல் என்ற நிறுவனம் வெளியிட்டுள்ளது. (பி)

# திருப்பதி குண்டுத்தாக்குதல் திட்டமிட்டவர்களின் அடையாளம் தெரிந்துவிட்டது

(சென்னை)

திருப்பதி திருமலைப் பாதையில ஆந்திரா முதல்வர் சந்திரபாபு நாயுடுவை தீர்த்துக் கட்ட கண்ணி வெடித் தாக்குதலை திட்டமிட்டு நடத்திய நக்சலைட்டுக்கள் யார், யார் என்பது தெரிந்து விட்டது.

ஆந்திராவின் பல மாவட்டங்களில் வலுமையாக இயங்கிவரும் தடைசெய்ப்பட்ட மக்கள் யுட்தக் குழுவைச்சேர்ந்த நக்சலைட்டுக்கள் ஆறுபேர் இந்தச் சதித்திட்டத்தைத் தீட்டித் தாக்குதல் நடத்தியதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதென ஆந்திரா மாநில காவல்துறையின் மூத்த அதிகாரியொருவர் கூறியுள்ளார்.

இந்த 6பேரும் மக்கள் யுட்தக் குழுவின் மூத்த தலைவரான பி.சுதாகர்ரெட்டி என்பவன் தீட்டித் தந்த சதித் திட்டத்தைச் செயற்படுத்தியுள்ளார்கள் என்றும் அவர்களுக்கு எதிரான முக்கிய ஆதாரங்கள் தங்களுக்குக் கிடைத்துள்ளதாகவும் அந்த அதிகாாரி தெரிவித்துள்ளார்.

கிளைமோர் என்னும் சாதாரணமாகத் தயாரிக்கக் கூடிய, ஆனால் சக்தி வாய்ந்த கண்ணிவெடியைத் துல்லியமாக இயக்க மக்கள் யுட்தக் குழுவின் பல்வேறு பிரிவுகளில் உள்ள தேர்ந்த நக்சலைட்டுக்களை தேர்ந்தெடுத்து இச் சதித்திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக அந்த அதிகாரி கூறினார்.

இந்த 6 நக்சலைட்டுக்களும் 20 முதல் 25 வயதிற்குட்பட்டவர்கள் என்றும், அவர்களை எந்த நேரத்திலும் பிடிக்கலாம் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார். (பி)

## இன்னு ஒரு தகவல்

# தர்மம்

உதவி செய்பவர்களின் மனம் நோகாமல் எப்படி நடந்து கொள்வது என்கின்ற கலையை காந்தியடிகள் கற்று வைத்திருந்தார். அதுபோல் அவரது வாழ்விலும் ஒரு சம்பவம் இடம்பெற்றதாம். பீஹாரில் பு,கம்பம் ஏற்பட்ட நேரம். அப்போது முஜாபர் புர்மகாராஜா என்று ஒருவர் இருந்தார். அவரது பெயர் மகேஸ்பிரவீத்கில். ஒரு நாள் அவரது வீட்டில் விருந்து உண்பதற்காக காந்தி சென்றிருந்தார். தடல்புடலான விருந்து. அதைப் பரிமாறியது ராஜாவின் மனைவி.

உணவைப் பரிமாறிக்கொண்ட அந்த ராணியைக் காந்தியடிகள் பார்த்தார். அந்த ராணியின் உடலில் ஏகப்பட்ட நகைகள். கழுத்திலும், காதிலும், கைகளிலும் ஏகப்பட்ட நகைகள் சுமக்க முடியாது அவர் அந்த நகைகளுடன் உணவு பரிமாறிக்கொண்டிருந்தார்.

அப்போது காந்தியடிகள் கேட்டார். ''அம்மா! இவ்வளவு நகைகளையும் போட்டுச் சுமந்து கொண்டிருக்கின்றீர்களே! உங்களுக்கு இது சிரமமாக இல்லையா?'' என்றாராம். அப்போது ராணி கூறினாராம் ''சிரமமாகத்தான் இருக்கின்றது. ஆனால் ராணி என்பதனால் இவ்வளவு நகைகளையும் போட்டுக் கொண்டிருக்க வேண்டிய கட்டாயம் எனக்கு உண்டு'' என்றாராம்.

உடனே காந்தி கூறினார் ''உங்களது இந்தக் கனம் குறைவதற்கு நான் ஓர் வழியைக்கூறுகின்றேன். அதே நேரத்தில் ஒரு சமூகக் கடமையையும் நிறைவேற்றிய மனநிறைவும் உங்களுக்குக் கிடைக்கும். பீஹார் பு,கம்பத்தில் நிறைய மக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு உதவி புரிய அதிகப்பணம் தேவைப்படுகின்றது. நான் பணத்தைச் சேகரித்துக் கொண்டிருக்கின்றேன். இப்போது நீங்கள் விரும்பினால் உங்களிடம் இருக்கும் நகைகளை கழட்டிக்கொடுக்கலாம். அப்படிக் கொடுக்கும்போது அவை ஓர் நல்ல காரியத்திற்குப் பயன்படும்'' என்றாராம். அந்த ராணியும் மறு வார்த்தை பேசாமல் தனது நகைகளைக் கழட்டி காந்தியடிகளின் பாதங்களில் வைத்தார்.

அவ்வாறு கழட்டி வைத்த பின்னர் ராணியின் முகத்தில் பெரிய மாற்றம் தெரிந்தது. இப்போது காந்தியடிகள் கேட்டாராம் ''இவ்வளவு நகைகளைக் கழற்றிக் கொடுத்து விட்டீர்களே! இப்போது நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்? '' என்று கேட்டாராம். அதற்கு அந்த ராணி கூறினாராம் ''எனது உடலில் உள்ள பாரம் மட்டும் குறைந்ததாக நான் நினைக்கவில்லை! எனது மனதிலும் ஒரு நிறைவு ஏற்பட்டுள்ளது. இந்தப் பணத்தை ஒரு நல்ல காரியத்திற்குப் பயன்படுத்தப்போகின்றீர்கள். அதற்கு எனது நகைகள் பயன்படப் போகின்றது என்று நினைக்கும்போது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. அதனால் தேவையில்லாமல் நான் சுமந்து கொண்டிருந்த பாரமும் குறைந்து போய்விட்டது. மனதிலும் ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டுள்ளது'' என்று கூறி காந்தியடிகளின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினாராம் அன்றிலிருந்து அவரும் மிக எளிமையான உடைதான் அணிய ஆரம்பித்தாராம்.

உதவி புரிதலில் உதவி பெறுபவர்களை விட உதவி புரிபவர்களுக்கு அதிக மகிழ்ச்சி ஏற்படும். உள ரீதியாக ஒருபெரிய மாற்றமே நிகழ்கின்றது. அதனை அனுபவித்துப் பார்த்தால் மேலும் மேலும் உதவிகள் புரிய வேண்டும் எனும் ஆர்வம் வளரும்.

காந்தியடிகளைப்போலவே பணம் வசூலிப்பதில் பெருந்தலைவர் காமராஜரும் ஈடுபட்டார். சுதந்திரப்போராட்ட காலத்தில் உண்டியல் தயார் செய்து பணம் வசூல் செய்வாராம். அதற்குக் ''காந்தி உண்டியல்'' என்றே பெயர் வைத்தாராம். அதில் பணம் சேகரிப்பார். சுதந்திரப் போராட்டத்திற்குப் பயன் படுத்தவேண்டும் என்பதற்காக அவர் மிகவும் பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர் என்றாலும் தனது நாட்டுக்காக இதனைச் செய்தார். இப்படி இருப்பவர்கள் எல்லோருமே பெரியவர்கள்.

இதேபோல் ஒருவர் விளையாட்டுத்துறையில் மிகுந்த சாதனை செய்து விட்டார் என்பதற்காக் ஒரு இலட்ச ரூபா பரிசு கிடைத்தது. பத்திரிகை நிருபர்கள் அவரைப் பேட்டி காணும்போது கேட்டனர். ''இந்தப் பணத்தை என்ன செய்யப்போகின்றீர்கள்? '' என்று. அவர் சொன்னார் ''தர்மத்திற்குச் செலவு செய்யப் பயன்படுத்தப்போகின்றேன்'' என்று கூறினார். நிருபர்கள் கேட்டனர் ''எதற்காகத் தர்மம் செய்யப்போகின்றீர்கள்?'' இவர் அலுப்போடு கூறினார். ''சும்மா போங்கள் ! எனது மனைவியின் பெயர் தர்மம் அவளுக்காகத்தான் செலவு செய்யப் போகின்றேன்'' என்றாராம் அவர்.


இளசை எஸ். சுந்தரம்

# மீண்டும் யுத்தம் ஆரம்பித்தால் அதற்கான ஒத்துழைப்பை உலகநாடுகள் வழங்கும்

## சபையில் அமைச்சர் மாரப்பன தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சி செய்த காலத்தில் தான் தமிழீழ விடுதலைப்புலிகள் ஆயுத



ரீதியாக வளர்ச்சி பெற்றனர் என பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடாளுமன்றத்தில் நடைபெற்ற நாட்டின் தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஒத்திவைப்புப் பிரேரணையின்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து பேசிய அவர், கிழக்கு மாகாணத்திலும், வட பகுதியில் ஆனையிறவு போன்ற பாரிய இராணுவத் தளங்களையும் இவ் ஆட்சிக்காலத்திலேயே புலிகள் கைப்பற்றினர். இதனை எந்தவொரு அரசியல் கட்சிகளும் மறைககவோ மறுக்கவோ முடியாது.

தற்போது இராணுவ வீரர்கள் இராணுவ ரீதியிலான தந்திரோபாயங்களை கையாண்டு வருகின்றனர். அத்துடன் புலிகளின் கடற்புலியையும் அவர்களின் கப்பல்களையும் தாக்கி அழிக்கும் வல்லமை கொண்டவர்களாக மாறியுள்ளனர்.

அவசர நிலை தோன்றும் பட்சத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான போர் நடவடிக்கைகளில் ஈடுபடும் வல்லமை தற்போது இராணுவத்தினருக்கு உண்டு.

இதற்குத் தேவையான சர்வதேச ஒத்துழைப்பும் அரசாங்கத்திற்குக் கிடைக்கும் பாதுகாப்பு நிலைமைகளை கருத்தில் கொண்டு இத்தகைய திட்டங்களை வெளியிடுவது பொருத்தமானதல்ல. அவ்வாறு வெளியிட்டாலும் அவை தேசிய பாதுகாப்புக்கு குந்தகமாகவே அமையும்.

திருகோணமலைத் துறைமுகத்திற்கும், அங்குள்ள கடற்படைத் தளத்திற்கும் விடுதலைப்புலிகளால் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது எனக் குற்றம்சாட்டி வரும் எதிர்க்கட்சியினருக்கு அது தொடர்பாக விளக்கமளித்த அமைச்சர்,

தமிழீழவிடுதலைப்புலிகளின் ஒவ்வொரு நடவடிக்கைகளையும் அரசு கண்காணித்து வருகிறது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி-61)

# கடலோர வள முகாமைத்துவ முழுநாள் விழிப்புணர்வு செயலமர்வு

## நேற்று செயலகத்தில் நடந்தது

(யாழ்ப்பாணம்)

கடலோர வளங்கள் முகாமைத்துவம் பற்றிய முழுநாள்விழிப்புணர்வுச்செயலமர்வு ஒன்று நேற்று யாழ்.செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் தலைமையில் இடம்பெற்ற இச்செயலமர்வில், கரையோரப் பாதுகாப்புத் திணைக்கள முகாமையாளர் ஐ.ரணசிங்க, உதவி முகாமையாளர் காமினி ஹெப்கே, பொறியியலாளர் விஜயானந்த ஆகியோரும் யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலர்கள், கரையோரப் பிரதேச கிராம அலுவலர்கள், காணி உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

கரையோரப் பாதுகாப்புத் திணைக்கள முகாமையாளர் ஐ.ரணசிங்க அங்கு கருத்துக் கூறுகையில்,

கடலோர வளங்களை பாதுகாப்பதில் அராங்க ஊழியர்கள் உடன்பாட்டுடன் செயற்படவேண்டும.

எமது எதிர்காலச் சந்ததியின் நலன் கருதி கடந்த கால கசப்பான அனுபவங்களை மறந்து புதிய அத்தியாயத்தைப் படைக்கவேண்டும்.

கரையோர வளங்களைப் பாதுகாப்பதற்கான வாய்ப்பை கடந்த இரு தசாப்த போர் காரணமாக நாம் இழந்து விட்டோம்.

காரைநகரில் உள்ள கசூரினா கடற்கரையை விசேட பிரதேச முகாமைத்துவ திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்து அழகுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது என்றார்.

இதேவேளை, யாழ்.குடாநட்டில் பருத்தித்துறை, காங்கேசன்துறை, காரைநகர் ஆகிய இடங்களில் உள்ள வெளிச்சவீடுகளும் மருதங்கேணி,குடாரப்பு ஆகிய இடங்களில் உள்ள வெளிச்சக்கோபுரங்களும் கடந்த 25 வருடங்களாகப் புனரமைக்கப்படாமையால் இவை சாய்ந்து விழும் அபாயமிருப்பது பற்றியும் இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்டப்பட்டது. (உ-16)

## இராசி பலன்

**10.10. 2003**

**(புரட்டாதி 23, வெள்ளி)**

புரணை- பி.ப. 1.20 வரை

ரேவதி -பி.இ. 4.20 வரை

இராகுகாலம் - 10.32 - 12.02

சுபநேரம் - 6.02 - 7.32

**மேடம்**
சுபசெலவு, உறவினர் சந்திப்பு, முயற்சி தாமதம், உணர்ச்சி வசப்படல்.

**இடபம்**
குடும்ப நன்மை, தனவரவு, கீர்த்தி, தொழிலில் முன்னேற்றம்.

**மிதுனம்**
சுபநிகழ்ச்சி, அதிக பிரயாசை, பிறர் உதவி, முயற்சி கைகூடும்.

**கடகம்**
சுயதிட்டமிடல், காரிய தாமதம், அமைதிக்குறைவு, பிரயாணம்.

**சிங்கம்**
எதிர்பாராத பிரச்சினை, தொழில் கஷ்டம், தெய்வசிந்தை, காரிய தாமதம்.

**கன்னி**
தனஇலாபம், பிரயாண நன்மை, நண்பர் சந்திப்பு, முயற்சி பலிதம்.

**துலாம்**
நல்லவரவேற்பு, பகைவர் நட்பு, காரிய சித்தி, தொழில் நன்மை.

**விருச்சிகம்**
தொழில்சிந்தை, முயற்சி தாமதம், சொத்துப் பிணக்கு, மனச்சஞ்சலம்.

**தனுசு**
புதியவிடயம், உஷ்ணவியாதி, தாய்வழி உறவு, காரியதாமதம்.

**மகரம்**
பொருள் சேர்க்கை, தெய்வ தரிசனம், முயற்சி கைகூடும், தொழில் சிறப்பு.

**கும்பம்**
காரிய அலைச்சல், அதிக வார்த்தை, தனவிரயம், தெய்வ சிந்தை.

**மீனம்**
நல்ல முயற்சி, ஜனவசியம், தனவரவு, பிரயாணம்.

(பழையநேரப்படி கணிப்பிடபட்டது)

- வளவன்.

# மாணவர்தம் அறிவாற்றலை வழிப்படுத்துவது ஆசிரியர் கடமை

### ஆசிரியர் தின விழாவில் யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர்

(தாவடி)

நடைபெறும் சகல போட்டிகளிலும் மாணவர்களும் ஆசிரியர்களும் பங்குபற்றி தங்கள் திறன்களை வெளிப்படுத்தல் வேண்டும். எல்லோருக்கும் வெற்றி கிடைப்பது என்பது இங்கு முக்கியமில்லை. பங்குபற்றுவதே முக்கியமானதாகும். மாணவர்கள் பாடநூல்களுடன் மட்டும் நின்று விடாமல் அவர்களின் செயற்திறன்களை வளர்ப்பதற்கு போட்டிகளில் பங்குபற்ற ஆசிரியர்கள் ஊக்கப்படுத்துதல் வேண்டும்.

நாம் வாங்கும பென்சில் உடனே எழுதாது. அதனைச் சீவிக் கூராக்கி எழுத வேண்டும். இதேபோல மாணவர்களின் அறிவையும் திறனையும் கூராக்கி வளர்க்க வேண்டியது ஆசிரியர்களின் தலையாய கடமை.

இவ்வாறு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற ஆசிரியர் தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

நல்லூர் கோட்ட தற்காலிக உதவிக் கல்விப்பணிப்பாளர் அ. பஞ்சலிங்கம் தலைமையில் நடை பெற்ற இவ்விழாவில் வலயப் பணிப்பாளர் தொடர்ந்தும் கூறியதாவது,

மாணவர்களிற் சிலர் படிவங்கள் நிரப்புவதில் கஷ்டப்படுவதை அவதானிக்க முடிகின்றது. பாடசாலையின் தொலைபேசி இலக்கம் தெரியாமல் இருக்கலாம். ஆனால் பாடசாலையின் முகவரி கட்டாயமாக மாணவர்களுக்கு எழுதத்தெரிந்திருக்க வேண்டும். எழுதத்தெரியாத மாணவர்களை அவதானிக்கப்பட்டபோது உண்மையில் மன வேதனை நெஞ்சை உறுத்துகின்றது.

அவர்களின் ஆற்றல் வளர வழிகாட்டப்பட-நெறிப்படுத்தப்பட வேண்டியது ஆசிரியர்களின் பொறுப்பே. ஆசிரியர் தினவிழாவில் ஆசிரியர்களாகிய நாம் நம் குழந்தைகளின் முன்னேற்றத்திற்கு வழிவகுப்போமென திடசங்கற்பம் பூணுவோம் என்று குறிப்பிட்டார்.

(உ-117)

### க.பொ.த.(சா/த) பரீட்சைக்குத் தோற்றும்

# மாணவர்களின் அடைவு மட்டத்தை அதிகரிக்கும் கலந்துரையாடல்

(கந்தரோடை)

உடுவில் கல்விக்கோட்டப் பாடசாலைகளில் க.பொ.த.(சா/த) இல் கல்விபயிலும் மாணவர்களின் கல்வி அறிவுமட்டத்தை மேம்பாடடையச் செய்யும் வகையிலான கருத்தரங்குகள் பாடசாலை ரீதியாக நடத்தப்படவுள்ளன.

இந்த வகையில்,எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த.(சா/த) பரீட்சையில் சிறந்த அடைவைப் பெற்றுக்கொள்ளும் வகையிலான மீட்டற் பயிற்சிகள்,பரீட்சைகள் மற்றும் கருத்தரங்குகளை பாடசாலைகளில் பிரதி சனிக்கிழமை தோறும் காலை 9.00மணி முதல் நண்பகல் 12.00 மணிவரை நடாத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இணுவில் மத்திய கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயக்கல்லூரி, மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, ஏழாலை மத்திய மகாவித்தியாலயம் மற்றும் உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம் ஆகியவற்றிலேயே இவ் வகுப்புகள் நடாத்தப்படவுள்ளன. (உ-103)

*இளிவரின் வாழாதமானம் உடையார்*
*ஒளி தொழுது ஏத்தும் உலகு*

*—குறள்*

# வலம்புரி

## பெண்களின் எழுச்சி

''மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்'' என்றான் மகாகவி பாரதி. பெண்ணடிமைக்கு எதிராகக் குரல் கொடுத்த பாரதி ஞான நல்லறம்-வீரசுதந்திரம் வேண்டி நிற்கும் பெண்களையே எழுச்சி மிகு பெண்களாகக் கண்டான். பெண்ணடிமைத்தனம் சமூகத்திலிருந்து என்று விடுபடுகிறதோ அன்றுதான் அந்தச் சமூகம் முன்னேற்றமடைய முடியும். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற குணங்களைப் பெண்களுக்கென வகுத்துவிட்ட சமூகத்தில் பெண்கள் ஆண்களின் பக்க துணையின்றி தமது தற்துணிவில் என்று வீறுகொண்டெழுகிறார்களோ அன்றுதான் பெண்களின் அடிமைத்தனம் நீங்கும் ஆண்களை நம்பி, அவர்களின் துணையின்றி தம்மால் எதுவுமே செய்ய முடியாதென்ற மனநிலை கொண்ட பெண்கள் எழுச்சி பெறுவதோ அன்றி சமூகத்தில் அவர்கள் புரட்சி செய்வதோ முடியாத விடயமாகும்.

இதனைப் புலவன் பாரதி ''நீசத் தொண்டும் மடமையும் கொண்டதாய் தலத்தில் மாண்புயர் மக்களைப் பெற்றிடல் சாலவே அரிதாவதோர் செய்தியாம்'' என்றுரைத்தான்.

பாரதியின் கணிப்பீட்டில் மடமைத்தனமும், அச்சமும் கொண்ட பெண்கள் இந்நாட்டிற்கு வீறுகொண்ட மகவுகளைப் பெற்றெடுக்கக் கூட முடியாதவர்கள் எனக் கண்டு கொண்டான்.

பெண்ணடிமைத்தனம் குறித்து மிகப் பெரும் ஆய்வு செய்து தனது கவித்திறத்தால் அடிமைத்தளையை அறுத்தெறியப் புறப்பட்ட பாரதி ஆண்களே! நீங்கள் பெண்களுக்கு ஊறு விளைவிக்காதீர்கள் என்று கெஞ்சி வேண்டவில்லை, மாறாகப் பெண்ணிணமே நீ வீறுகொண்டெழு, ஆண் ஆதிக்கத்தைக் குறை கூறாதே! உன்னை நீ ஒழுங்குபடுத்திக் கொள், நீ நீயாக இருப்பாயானால் ஆணாதிக்கம் உன்னிடம் மண்டியிடும் இதுவே பாரதி பெண்களுக்கு கூறிய அறிவுரை.

அந்த பாரதி கண்ட புதுமைப் பெண் தமிழீழ மண்ணில் பிறந்து விட்டாள். நாட்டின் விடுதலைக்காய்ப் புறப்பட்டு தன்னை ஆகுதியாக்கிய வீரச் செறிவை வேறெங்கும் தேடுதல் வீணாகும், எனினும் பெண்களின் எழுச்சி என்பது சுட்டு விரல்களால் சுட்டிக்காட்டும் உதாரணங்களன்று.

பெண்ணடிமை விலங்கு உடைக்கப்பட வேண்டுமாயின் பெண்கள் எழுச்சி கொண்டெழுதல் வேண்டும். அதற்கு முன்னதாக ஒழுக்கம், உயர்ந்த சால்பு, நேர்கொண்ட பார்வை வீறுகொண்ட நடை என்ற இயல்புகளைப் பெண்கள் தன்னகத்தே கொள்ளுதல் அவசியமாகும். இதற்காக பெண்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தக் கூடியதாக மகளிர் அமைப்புக்கள் தமது செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

ஓரினம் தன்னை உயர்வுறச் செய்ய வேண்டுமாயின் முதலில் அந்த இனம் சார்ந்த பெண்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதும் அதற்காகப் பெண்கள் குரல் கொடுப்பதும் அவசியமாகும்.

# உருத்திராட்சம் மணிகளைத் தரிப்பதால் ஆணவமடக்கி அமைதியைக் காணலாம்

''தூய வெண்ணீறு துதைந்த பொன் மேனியும், தாழ்வடமும்'' கொணடவர்கள் சிவனடியார்கள். (துதைந்த- நன்கு பதிந்த; தாழ்வடம்- உருத்திராட்ச மாலை)

சைவ சமயத்தின் புறச்சின்னங்களாகத் திருநீறும், உருத்திராட்சமும் விளங்குகின்ற. இவற்றைப் பல உறுப்புகளில் புனையும் போது உச்சரிக்க வேண்டிய திருவைந்தெழுத்து அகச்சின்னம். அகத்தை தூய்மைப் படுத்தும் சின்னம் இது.

திருநீற்றையும், உருத்திராட்சத்தையும் புறச்சின்னங்கள் என்று முதன முதல் குறித்தவர் திருமூலர்.

மேலும் 1 குண்டலம், 2 உருத்திராட்சம், 3 திருவைந்தெழுத்து, 4 சங்கு, 5 மண்டையோடாகிய சட்டி, 6 திருநீற்று மடல், 7 பாதுகை, 8 ஆசனம், 9 யோகப் பட்டம், 10 யோகத்தண்டு ஆகிய பத்தும் சிவ யோகிகளுக்குரிய சாதனங்கள் என்று திருமூலர் வரையறுக்கிறார். (திருமந்திரம் -1864)

எனவே, உருத்திராட்சம் என்பது ஒரு சிவசின்னம்; சாதனம். சாதனம்-கருவி.

### நன்மைகள்

திருநீறு, உருத்திராட்சம் என்பன தெய்வத்தன்மையும், மருத்துவக் குணங்களும் ஒருங்கே கொண்டவை.

உருத்திராட்ச மணிகளைத் தரிப்பதால், உடம்பிற்கும், உள்ளத்திற்கும், உயிருக்கும் பற்பல நன்மைகள் விளைகின்றன; நிலைக்கின்றன.

### உடம்பு

உருத்திராட்ச மணிகள் உடம்புக்குச் சுகாதாரத்தையும் ஆரோக்கியத்தையும் தருகின்றன.

உடம்பில் வாதம், பித்தம், சிலேட்டுமம் என்ற மூன்றும் ஒன்றையொன்று முந்தாமல் ஒரே சீராக வைத்திருக்க உருத்திராட்ச மணிகள் துணைசெய்கின்றன.

தீய சக்திகள் உடம்பைத் தீண்டாமல் கவசமாய் நின்று உருத்திராட்ச மணிகள் காக்கின்றன. உடம்பில் நோய்கள் வராமல் தடுக்கின்றன. அவை மருந்தாகி, வந்த நோயகளைக் குணப்படுத்து கின்றன.

### உள்ளம்

உருத்திராட்ச மணிகளைத் தரிப்



பதால், உள்ளம அமைதியில் மூழ்கிறது; பக்குவப்படுகிறது; வலிமையைப் பெறுகிறது; உள்ளத்தில் பக்தி உணர்வுகள் பெருகின்றன; தீய எண்ணங்கள் தோன்றுவதிலலை.

அனைத்துக்கும் மேலாக, அவற்றைத் தரித்தவர் ஒரு மேலான சிவபக்தர் என்ற பெருமிதக் களிப்பை உள்ளம் அடைகிறது.

உள்ளத்தில் உறையும் இறைவனை, அந்த உள்ளமே உணரும்படி செய்யும் ஆற்றல் உருத்திராட்ச மணிகளுக்கு உண்டு.

### உயிர்

உருத்திராட்ச மணிகளால், இருவினைகள் ஒழிகின்றன; மும்மலங்கள் அகலுகின்றன; சிவகதியை அடையத்தக்க உயர் தகுதியை உயிர் மிக எளிதில் பெறுகிறது.

மந்திர ஒலிகளை ஈர்க்கும் சக்தியை உருத்திராட்ச மணிகள் இயல்பாகக் கொண்டிக்கின்றன.

எனவே, மந்திரங்களை உச்சரிக்கும் போதும், பக்திப் பாடல்களைப் பாராயணம் செய்யும் போதும், அவற்றின் முழுப் பலன்களை உடம்பும், உள்ளமும், உயிரும் பெறுவதற்கு உருத்திராட்சததின் துணைகள் தேவை.

உருத்திராட்ச மணிகளை அணிவதற்கு ஒருவர் கூச்சப்படக்கூடாது.

சிவாலய வழிபாட்டின் போது, உருத்திராட்ச மணிகளை அணிந்து வரும் அடியவர்கள், சிறப்பாகச் சிவ தரிசனம் செய்ய நந்தியும் சண்டேசுவரரும் உதவிபுரிகிறார்கள்.

''ஆயிரம் உருத்திராட்ச மணிகளை அணிந்து வருபவரைப் பார்த்து 'இவர் சிவனே' என்று தேவர்கள் பணிகிறார்கள்'' என்று, இவற்றின் மேன்மையைப் 'பிரமோத்தர காணடம்' என்னும் நூல் கூறுகிறது.

உருத்திராட்ச மணிகளை அணியாமல், சிவபூஜை முதலிய காரியங்களைச் செய்வது பாவம் ஆகாது. ஆனால் அவற்றால் பெறும் நன்மைகளை, அவற்றை அணியாதவர்கள் வணே இழந்துவிடுகின்றனர். அணிந்தவர்கள், அந்த நன்மைகளை முழுமையாகப் பெற்றுப் பேரின்பமும், பக்தியும் பெறுகின்றனர்.

### உருத்திரனும் உருத்திராட்சமும்

உருத்திரன் என்ற பெயரின் வேர்ச் சொல் ''ருத்'' 'அழுது கண்ணீர் வடித்தல்' என்பது இதன் பொருள்.

சிவனைக் குறிக்கும் 'ருத்திரன்' என்ற இந்தப் பெயர் வேத காலத்திலிருந்தே வழக்கத்தில் உள்ளது.

உருத்திரன்+அட்சம்=உருத்திராட்சம். சிவனின் கண். அக்ஷம்-அக்கம்-

**டாக்டர் டி.செல்வராஜ்**

அக்கு முதலிய சொற்கள் கண்ணைக் குறிக்கின்றன.

உருத்திரனது கண்களில் தோன்றியது உருத்திராட்சம்.

இதுபற்றிய புராணக் கதைகள் சில உண்டு.

உருத்திரன் திரிபுரங்களை அழிக்கப் புறப்பட்ட போது, அவரது கண்களிலிருந்து வழிந்த நீர்த்துளிகளே விதைகளாகித் தோன்றியது உருத்திராட்சம்.

உருத்திரன் தாண்டவ நடனமாடிய போது. அவரது கண்களிலிருந்து தெறித்த நீர்த் துளிகளே உருத்திராட்ச மரங்களின் விதைகள் என்பது மற்றொரு புராணக்கதை.

இது போன்று உருத்திராட்சத்தின் தோற்றத்தைப் பற்றி பல புராணக் கதைகள் இருக்கின்றன. எனினும் இவற்றின் அடிப்படை உண்மை ஒன்றுதான். ஆணவத்தை அழித்து அமைதியையும், மகிழ்ச்சியையும் நிலைநாட்ட வேண்டும் என்ற நோக்கத்தில் பிறந்தது உருத்திராட்சம்.

அதை அணிந்தவர்களும் அந்த நோக்கங்களை நிறைவேற்ற வேணடும். அதற்கான ஓர் அடையாளமாக உருத்திராட்சம் திகழ்கிறது. □

# வெள்ளி நற்சிந்தனை

# காசநோய் சிகிச்சைப் பிரிவை இடமாற்றுமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் அரசினர் வைத்திய சாலையில் இயங்கிவரும் காசநோய் சிகிச்சைப்பிரிவை விரைவில் இடமாற்றுமாறு அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அண்மையில் கோப்பாய் அம்மன் கோயிலடி சனசமூக நிலைய கடடடத்தில் அப்பகுதி கிராம சேவையாளர் தலைமையில் நடைபெறற வாழ்க்கைத்திறன் அடிபபடையிலான கல்வி என்னும் தலைப்பிலான கலந்துரையாடலிலேயே அப்பகுதி மக்கள் இவ் வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

அவர்கள் அங்கு மேலும் குறிப்பிடுகையில்,

மக்கள் செறிந்து வாழும் இப்பகுதியில் காசநோய்ப் பிரிவு இயங்குவதால் சிகிச்சை பெறும் நோயாளர்கள் கட்டுப்பாடின்றி பொது இடங்களில் நடமாடி வருகின்றனர்.

குறிப்பாக உணவகஙகளுககுச் சென்று உணவு அருந்தி வருவதால், அங்கு ஏனைய மக்கள் செல்ல அஞ்சுகின்றனர்.

இதுபற்றி சம்பந்தப்பட்டவர்களுக்கு பலதடவைகள் முறையிட்டும் எதுவித நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை எனத் தெரிவித்தனர்.

அத்துடன், அங்கு நுளம்புகளின் பெருக்கமும, பாதீனியத்தின் பெருக்கமும் அதிகரித்து வருவதையும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

(உ-10)

# கல் அகழ்வு

(மல்லாகம்)

மருதனார் மடத்தில் உள்ள சபாபதிப்பிள்ளை நலநோன்பு நிலைய மக்கள் சிலர் அங்குள்ள வெற்றுக் காணிகளில் பாரிய கற்களை அகழ்ந்து விற்பனை செய்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் மழை காலங்களில் நீர் தேங்கி நிற்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

(உ-86)

## தினசரி தியானம்

ௐ

### ஒழுக்கமே ஆற்றல்

ஒரு மனிதனின் ஒழுக்கமே அவனை வாழவைக்கின்றது. ஸ்ரீ.ஆதிசங்கரர், புத்தபகவான், ஏசுநாதர் மற்றும் பழங்கால முனிவர்களை எல்லாம் அவர்களது வியக்கத்தக்க ஒழுக்கங்கள் காரணமாகவே இன்றும் நினைவு கூர்கின்றோம். ஒருவருக்கு உண்மையான ஆர்வத்தையும் சக்தியையும் தருவது ஒழுக்கமே. இன்னும் மேலாகச் சொல்ல வேண்டுமானால் ஒழுக்கம் இல்லாதவர் நடைப்பிணமே எனவே பக்தர்கள் நல்ல ஒழுக்கங்களைக் கடைப்பிடிக்க வேண்டும்.

**சுவாமி சிவானந்தர்**

# ஆசிரிய நியமனங்கள் அனைத்தும் மாகாணசபையிடம் ஒப்படைப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் ஆசிரிய நியமனம் வழங்கும் முழு அதிகாரமும் அந்த மாகாண சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதற்கான அதிகாரங்களைக் கல்வி அமைச்சர் கருணா சேன கொடித்துவக்கு வழங்கியுள்ளார்.

இதற்கமைய கடந்த காலங்களில் கல்விஅமைச்சு ஊடாக வழங்கப்பட்டு வந்த ஆசிரிய நியமனங்கள் அனைத்தும், இனி மாகாணக் கல்வி அமைச்சு ஊடாகவே மேற்கொள்ளப்படும்.

எனினும் இம்மாகாண ஆசிரியர்களுக்கான சம்பள மற்றும் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் மத்திய அரசாங்கத்தினாலேயே மேற்கொள்ளப்படும்.

இதேவேளை, மேற்படி மாகாணத்தில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு, இவ்வருட இறுதிக்குள் மூவாயிரம் தமிழ் மொழி மூல ஆசிரியர்களும், 193 சிங்கள மொழிமூல ஆசிரியர்களும் நியமிக்கப்படவுள்ளனர். (தி-61)

# பஸ் தரிப்பிடத்தில் வெள்ளம் பயணிகள் பெருத்த சிரமம்

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காடு பொதுச் சந்தைக்கு முன்பாக, யாழ்ப்பாணம்-பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள பேருந்துத் தரிப்பிடம் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது.

இதனால், இப்பகுதியில் பஸ்ஸிற்காகப் காத்து நிற்போர் வெயில் மற்றும் மழை காரணமாகப் பெருத்த சிரமம் அடைந்து வருகின்றனர்.

தவிரவும், இப்பகுதியில் மாரி காலத்தில் வெள்ளம் தேங்கி நிற்பதால், வாகனங்களில் இருந்து இறங்கும் பயணிகள் மிகவும் கஷ்டமுறுவதுடன், வாகனங்கள் செல்லும் போது அயலில் நிற்கின்ற ஆட்களுக்கு வெள்ளத்தை அடித்துச் செல் கின்ற நிலையும் காணப்படுகின்றது. (உ-4)

# வகுப்பறைக் கட்டடங்களுக்கு 18 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டப் பாடசாலைகளில் நிலவும் வகுப்பறைப் பற்றாக்குறைகளை நிவிர்த்தி செய்வதற்கு கிழக்கு அபிவிருத்தி மற்றும் முஸ்லிம் சமய விவகார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இம் மாவட்டத்தில் உள்ள தமிழ-முஸ்லிம் பாடசாலை வகுப்பறைக் கட்டடங்களே புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ளன.

இதற்கமைய வீடமைப்புப் பிரதி அமைச்சர் வசீர் சேகுதாவுத்தின் பணிப்புரைக்கு அமைய முதற்கட்டமாக 15 பாடசாலைகளில் வகுப்பறைக் கட்டடங்கள் அமைக்கப்படவுள்ளன.

இதற்காக 18 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு கல்வி வலயத்தில் உள்ள ஒன்பது பாடசாலைகளிலும், கல்குடா கல்வி வலயத்தில் உள்ள6 பாடசாலைக்ளிலும் வகுப்பறைகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

(தி-61)

## கிண்ணியாவில் வன்முறை...

லிம்கள் மறியல் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.இப் போராட்டத்தை அடுத்து கிண்ணியாப் பகுதியில் இருசமூகத்தவர்களுக்கிடையேயும் மாறி மாறி கைகலப்புக்கள் இடம் பெற்றன.

இது ஒருபுறமிருக்க மறு புறத்தில் ஒரு தரப்பை மற்றைய தரப்பு கடத்துவதாகவும், தாக்குவதாகவும் வதந்திகள் பரவத் தொடங்கிய தைத் தொடர்ந்து அப் பகுதியில் பெரும் பதற்றம் உருவாகியது.

இப் பதற்ற நிலையையடுத்து இடிமண், பைசல் நகர் ஆகிய பகுதிகளில் இருந்த தமிழ்ச் சமூகத்தவர்கள் அச்சம் காரணமாக இடம் பெயர்ந்து ஆலடிப்பகுதிப் பாடசாலைகளில் தஞ்சம் அடைந்துள்ளனர். இதேவேளை அமைச்சர் ரவூப் ஹக்கீம் கிண்ணியாவிற்கு விஜயம் செய்துள்ளார். (இ)


மலிவு விற்பனை

தீபாவளியை முன்னிட்டு அனைத்துப் புடவை வகைகளும்
10.10.2003 தொடக்கம் 24.10.2003 வரை
விசேட மலிவு விலையில்
விற்பனையாகிறது
நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்
வளர்மதி ரெக்ஸ்ரைல்ஸ்
258, கே.கே.எஸ் வீதி
யாழ்ப்பாணம்
(7712)



தென் இந்தியத் திருச்சபை - யாழ் ஆதீனம்
அமெரிக்கன் இலங்கை மிஸன் அச்சகம்

அன்புடையீர்,
இன்று 10.10.2003 வெள்ளிக்கிழமை மாலை
4.00மணிக்கு
பேராயர் கலாநிதி அதி.வண.சு.ஜெபநேசன்
அவர்களால்
புதிய ஓவ் செற் அச்சகம்
464, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணத்தில்
அமைந்துள்ள
யாழ்ப்பாணக் கல்லூரி - பட்டப்படிப்புப் பிரிவு வளாகத்தில்
(யாழ்.மருத்துவமனை முன்பாக)
ஆரம்பிக்கப்படவுள்ளது
இவ் ஆரம்ப வைபவத்தில் அனைவரும் கலந்து
சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்
அ.ஜெயக்குமாரன்
செயலர்
தென் இந்தியத் திருச்சபை ~ யாழ் ஆதினம்
வட்டுக்கோட்டை
[C/6736]


# நினைவஞ்சலி



## மாண்புமிகு திருமதி ஆர்.டி.ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா

அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி
10.10.2003ம் ஆண்டு வெள்ளிக்கிழமை காலை
10.00மணிக்கு அவரின் திருவுருவப் படத்திற்கு மலர்
அஞ்சலி செலுத்தி நிகழ்ச்சிகள் யாழ்ப்பாணம் ஸ்ரீலங்கா
சுதந்திரக் கட்சி பணிமனையில் நடைபெறும்
அன்றைய தினம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தொகுதி
அமைப்பாளர்கள் மத்திய குழு உறுப்பினர்கள்,செயற்குழு
உறுப்பினர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு
நினைவஞ்சலியை சிறப்பிப்பார்கள்

183, முதலாம் குறுக்குத்தெரு,
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி
பணிமனை
யாழ்ப்பாணம்
நிர்வாகம்

[C/6738]


HATTON NATIONAL BANK LIMITED

ஹற்றன் நஷனல் வங்கியினால்
நடாத்தப்படும் ஆண்டு 2003ற்கான
கூடைப்பந்தாட்ட போட்டிகள்

கழகங்கள் :- ஆண்கள், பெண்கள்
பாடசாலைகள் :- ஆண்கள், பெண்கள்

மேற்படி போட்டியில் பங்கு பற்ற விரும்பும் கழகங்கள், பாடசாலைகள் தங்களது விண்ணப்பங்களை ஹற்றன் நஷனல் வங்கி யாழ். கிளையில் சமர்ப்பிக்கும்படி வேண்டுகின்றோம்.


விண்ணப்பங்கள் ஏற்கும் இறுதித் திகதி :- 17.10.2003
அணி ஒழுங்குத் தெரிவு :- 20.10.2003 மாலை 4.30 மணிக்கு

ஹற்றன் நஷனல் வங்கி யாழ் கிளையில் இடம்பெறும் அணி ஒழுங்கு தெரிவின்போது பங்கு பற்றும் கழகங்கள், பாடசாலைகளில் இருந்து ஓர் உறுப்பினர் சமுகம் அளிக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்



ஹற்றன் நஷனல் வங்கி
உலக சேமிப்பு தினத்தையொட்டி
சிறுவர் உங்களைச் சேமிக்க அழைக்கிறது

ஒக்டோபர் 31ம் திகதியிலான
உலக சேமிப்பு தினத்தையொட்டி
ஹற்றன் நஷனல் வங்கியின்
எல்லாக் கிளைகளும்...
18 ஒக்டோபர்
சனிக்கிழமை
....திறந்து வைக்கப்பட்டிருக்கும்




இத்தினம்
* "சிங்கிதி" கணக்கொன்றை ஆரம்பிக்கவும்
* "ஜம்போ" உண்டியலில் நீங்கள் சேமித்த பணத்தை வங்கியில் வைப்புச் செய்யவும்
* உங்களுடைய "சிங்கிதி" கணக்கில் புது வைப்புக்களைச் செய்யவும் முடியும்!

ஸ்டஸன் 'புட்ஸ்' வழங்கும் இலவச சொக்கலேட்
'சந்தோஷத்திற்கும் உற்சாகத்திற்கும் சுவைமிக்க Mars'

ஹற்றன் நஷனல் வங்கியின் எந்தக் கிளையுடனாயினும்
கொடுக்கல் வாங்கல் செய்யும்
சிறுவர்கள் அனைவருக்கும்
அழகிய பரிசுகள்

ரூ. 200 வைப்பிற்கு பென்சில் பை
ரூ. 2,500 வைப்பிற்கு 'ஜம்போ' உண்டியல்
ரூ. 10,000 வைப்பிற்கு கைக் கடிகாரம்

வாருங்கள்!
சின்னஞ் சிறுவர்
உங்களை வரவேற்கக் காத்திருக்கின்றோம்!

மேலதிக விபரங்களுக்கு அருகில் உள்ள ஹற்றன் நஷனல் வங்கிக் கிளையை நாடுங்கள்

ஹற்றன் நஷனல் வங்கி
உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி
[C/6737]


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.10.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.